Registered as a news paper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

ஈழநாடு
சந்தா விபரம்
வாரப்பதிப்பு உட்பட

| | |
|---|---|
| ஒரு வருடத்துக்கு | ரூபா 40-00 |
| 6 மாதத்துக்கு | ரூபா 21-00 |
| 3 மாதத்துக்கு | ரூபா 11-00 |

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற் பெட்டி எண் 49

மலர் 5 யாழ்ப்பாணம் சுபகிருது பங்குனி 23 ஆம் நாள் துல்கஃதா 10 (5-4-63) வெள்ளிக்கிழமை இதழ் 56

இன்று

# பிரதமருடன் சில தமிழ் எம். பி. க்கள் மகாநாடு

## மொழிப்பிரச்னை பற்றி பேச்சுக்கள் நடத்துவர்

### தமிழரசு எம். பி. க்கள் இடம்பெறவில்லை!

கொழும்பு, வெள்ளி

**வடக்கு, கிழக்கு மாகாண பார்லிமெண்ட் அங்கத்தவர்கள் இன்று பிரதம மந்திரி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவைச் சந்தித்து மொழிப்பிரச்னை சம்பந்தமாக பேச்சுவார்த்தைகள் நடத்துவார்கள் என்று நம்பிக்கையாகத் தெரியவருகிறது.**

மொழிப் பிரச்னை சம்பந்தமாக பிரதம மந்திரியுடன் பேச்சுவார்த்தை நடத்துபவர்களில், நிந்தவூர் எம். பி., மூதூர் எம். பி., பொத்துவில் எம். பி., கல்முனை எம். பி., யாழ்ப்பாணம் எம். பி., ஆகியோருடன் திரு. ஈ. ஆர். எஸ். ஆர். குமாரசாமி உட்பட சிலர் இருப்பார்கள் எனத் தெரியவருகிறது.

இந்த மகாநாடு பிரதம மந்திரியின் வாசஸ்தலமான 'அலரி மாளிகை'யில் நடைபெறவிருக்கிறது.

**விஷயங்கள் வெளிவராது?**

இந்த மகாநாட்டில், ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளும் விஷயங்கள் யாவும் வெளியிடப்படமாட்டாதெனத் தெரியவருகிறது.

தமிழரசுக் கட்சியின் நடவடிக்கைகளுக்கு முன்னர், அரசாங்கம் ஒரு முடிவுக்கு வரவேண்டுமென்று, இந்த மகாநாட்டில் கலந்துகொள்ளவிருக்கும் அங்கத்தவர்கள், பிரதம மந்திரி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவைக் கேட்டுக்கொள்ள இருக்கிறார்களாம்.

## ஜி. ஜி. யோசனைக்கு டட்லி வரவேற்பு

கொழும்பு, வியாழன்

'தேசிய ஒற்றுமை குறித்து தமிழ்க் காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தெரிவித்த யோசனைகளை நான் வரவேற்கின்றேன்' என்று எதிர்க் கட்சித் தலைவர் திரு. டட்லி சேனநாயக்கா தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சிப் பத்திரிகைக்கு, திரு. டட்லி சேனநாயக்கா விடுத்துள்ள ஒரு அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது: "நாட்டின் முன்னேற்றத்துக்கு முதலில் நாட்டு மக்களிடையே ஒற்றுமையும் ஒத்துழைப்பும் அவசியமாகும். தேசிய ஒற்றுமை குறித்து திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் விடுத்த யோசனைகளை நான் வரவேற்கின்றேன். அவை பயன் தரவேண்டும். ஒரு ஐக்கிய இலங்கை உருவாக அவை வகை செய்யவேண்டும்.

இந்த நாடு செழிப்படைய வேண்டுமென்றால், எமது மக்களிடையே இன, மத ஒற்றுமை ஏற்படவேண்டுமென்று சுதந்திரம் பெற்ற இலங்கையின் முதற் பிரதமர் அன்று வேண்டிக்கொண்டார். முன்னேற்றமுள்ளதொரு நாடாக இலங்கையை மாற்ற வேண்டுமென்று அவர் அன்று கருதினர்.

மக்களிடையே ஒற்றுமையை நிலைநாட்ட, இப்போதுள்ளவர்கள் தவறிவிட்டார்கள். மத, வகுப்புக் கலவரங்களுக்கு; இப்பொழுது இந்த நாட்டைத் தங்களது கையில் வைத்திருப்பவர்கள் வித்திட்டுவிட்டார்கள்."

### ரஷ்ய மந்திரி மறைவு

#### நேரு அனுதாபம்

புதுடில்லி, ஏப்ரல் 4

ரஷ்ய உதவி வெளியுறவு மந்திரி திரு. புஷ்கின் காலமானது குறித்து பாரதப் பிரதமர் ஸ்ரீ நேரு அனுதாபச் செய்தியொன்றை அனுப்பியுள்ளார்.

## டாக்டர் தர்மலிங்கம் மேயர் பதவியைத் துறந்தார்

### ராஜினமா செய்தபின் நீண்ட அறிக்கை

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாண நகரின் மேயராக சென்ற பத்துமாதகாலம் பதவி வகித்துவந்த டாக்டர் எஸ். ஏ. தர்மலிங்கம் நேற்று தமது பதவியை ராஜினமாச் செய்தார்.

1962-ம் ஆண்டு மேமாதம் 29-ம் திகதி மேயராகப் பதவியேற்ற டாக்டர் தர்மலிங்கம் பெரும்பான்மை குழுவுக்குள் செய்து கொண்ட உடன்படிக்கைக்கிணங்க தமது பதவியை இப்பொழுது ராஜினமாச் செய்துள்ளார். சென்ற மாதமே டாக்டர் தர்மலிங்கம் தமது பதவியை ராஜினமாச் செய்ய முன்வந்தாரெனினும் பெரும்பான்மைக் குழுவினர் அதைத் தடுத்துத் தாமதப்படுத்தினர்.

மேயர் பதவியை நேற்று ராஜினமாச் செய்த டாக்டர் தர்மலிங்கம் மாநகரசபை அங்கத்தவர்களுக்கும் ஊழியர்களுக்கும் நேற்று மாலை ஒரு தேநீர்விருந்துபசாரமளித்தார்.

அடுத்த மேயர் யார் என்ற பேச்சு இப்பொழுதே மாநகரசபை வட்டாரங்களில் அடிபடத் தொடங்கியுள்ளது. பெரும்பான்மைக் குழுவிலிருந்து விலகியதாகக் கருதப்படும் ஒருவர் மேயராகலாமெனக் கூறப்படுகிறது.

### இன்று

வண்ணை சிவன்கோவில் 17ம் திருவிழாவில் மாலை 6-மணிக்கு திரு. வி. எஸ். எஸ். மணிபாகவதர் "ஈதை காட்டும் பாதை" என்னும் பொருள்பற்றி கதாப்பிரசங்கம் நிகழ்த்துவார்.

∴ ∴ ∴

நல்லூர் தேவஸ்தான சண்முக தீர்த்த மண்டபத்தில், மாலை 6-45 க்கு திரு. மு. மயில்வாகனம், 'ஆண்டானும் அடிமையும்' எனும் பொருள்பற்றி சொற்பொழிவாற்றுவார்.

### 35 லட்சம் பவுன் பாரதத்துக்கு பிரிட்டன் உதவும்

லண்டன், ஏப்ரல் 4

எஃகு பொருள் வாங்குவதற்கு பிரிட்டன் 35 லட்சம் பவுன்களை பாரதத்துக்கு உதவ முடிவு செய்துள்ளது.

## 'தமிழர் முன்னணி' நிறுவ சமஷ்டிக்கட்சி முயற்சி?

### நாளை வவுனியாவில் தீர்மானிக்கப்படும்

யாழ்ப்பாணம், வெள்ளி

**தமிழ்ப்பேசும் மக்களின் மொழி உரிமையைப் பெறுவதுசம்பந்தமாகத் தமிழரசுக்கட்சி தமிழ்ப் பிரமுகர்களைக் கொண்ட வட்டமேசை மகாநாடு ஒன்றைக் கூட்டுவது பற்றி நாளை ஆலோசனை செய்யவிருப்பதாகத் தெரியவருகிறது. சேர் அருணசலம் மகாதேவா சேர் கந்தையா வைத்தியநாதன், மற்றும் முன்னாள் தமிழ் எம். பி.க்கள் தற்போதைய எம். பி. க்கள் ஆகியோரைக் கொண்ட மகாநாடு ஒன்றைக் கூட்டி தமிழ் மொழி உரிமை பற்றி ஆலோசிக்கப்பட வேண்டுமென்றும் 'தமிழ் மொழி உரிமை முன்னணி' ஒன்று அமைப்பது பற்றி ஆலோசனை செய்யப்படவேண்டுமென்றும் தமிழரசுக் கட்சிப் பிரமுகர்கள் சிலர் கருதுவதாக அறியப்படுகிறது.**

இலங்கைத் தமிழரசுக்கட்சி மத்திய செயற்குழுக் கூட்டம் நாளைக் காலை வவுனியாவில் பட்டின சபை மண்டபத்தில் ஆரம்பமாகிறது. இக்கூட்டத்தில் சென்ற இரு கூட்டக் குறிப்புக்கள் அங்கீகரிப்பது' குறிப்புக்களிலிருந்து எழுதும் விஷயங்கள் பற்றி ஆராய்வது, கடிதங்கள் பரிசீலனை செய்வது, உப குழுக்கள் நியமிப்பது, கிராமசபைகளைப் பட்டின சபைகளாக மாற்றுவது பற்றி ஆராய்வது ஆகிய நிகழ்ச்சிகள் இடம் பெறுகின்றன. நாளைய கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரலில் நேரடி நடவடிக்கைபற்றிய விஷயம் இரண்டாவது நிகழ்ச்சியாக இடம் பெற்றுள்ளது.

என்றாலும் நிகழ்ச்சியின் இறுதியிலுள்ள 'வேறு விஷயங்கள்' பற்றிய நிகழ்ச்சியில் தமிழ்ப் பிரமுகர்களைக்கொண்ட மகாநாடு ஒன்றைக் கூட்டுவது பற்றிய விஷயம் முக்கிய இடம்பெறுமென அறியப்படுகிறது.

நேரடி நடவடிக்கைககுமுன் தமிழ்ப் பிரமுகர்களைககொண்ட வட்டமேசை மகாநாட்டைக கூட்டி தமிழ்ப்பேசும் மக்களின் உரிமைகள் படிப்படியாகப் பறிக்கப்படுவதையும் வருங்கால நிலைமை எப்படி இருக்குமென்பதையும் தமிழரசுக் கட்சி இதுவரை எடுத்த நடவடிக்கைகளையும் விளக்கிக் கூறி தமிழ்ப் பேசும் மக்களின் உரிமைகளைப் பெறுவதற்கு வேறு என்ன வழிகள் உள்ளனவென்று அவர்களிடம் மாற்று யோசனை கேட்கலாமென [illegible] பிரமுகர் சிலர் கருதுவதாகத் தெரிகிறது. அவர்கள் தெரிவிக்கும் யோசனைகளை அமுல் [illegible]

8-ம் பக்கம் பார்க்க

# "இந்திய ஹைகமிஷனின் நாசவேலைகள்"

## ராஜரத்ன குற்றச்சாட்டு

கொழும்பு, புதன்

இலங்கையிலுள்ள இந்திய ஹைகமிஷன், இலங்கை அரசாங்கத்துக்கு எதிரான "நாசவேலைகளில்" ஈடுபட்டதாக ஜாதிக விமுக்தி பெரமுனை கட்சித் தலைவர் திரு. கே. எம். பி. ராஜரத்தின குற்றம் சாட்டியுள்ளார்.

இதுசம்பந்தமாக திரு. கே. எம். பி. ராஜரத்தின வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:-

"தமிழரசுக் கட்சியினர் தங்களது "எல்லாம் தமிழியக்கத்தை" திரைப்படம் காட்டுவதன் மூலம் ஆரம்பிப்பார்கள் என்றும், கொழும்பு சைவமங்கையர் கழகத்தில் திரையிடப்படவிருக்கும் இப்படம் இந்திய ஹைகமிஷனிடமிருந்து வாங்கப்பட்டது என்றும் தமிழரசுக் கட்சிப் பத்திரிகையான "சுதந்திரன்" அறிவித்துள்ளது. இலங்கைப் பிரதமரின் சீன விஜயம் குறித்து, இங்குள்ள சீன தூதராலயம் திரைப்படம் காட்டியதை இந்திய ஹைகமிஷன் எதிர்த்திருந்தது.

இலங்கையிலுள்ள தமிழரசுக் கட்சி, இலங்கைத் தொழிலாளர் சங்கம், ஜனநாயகத் தொழிலாளர் சங்கம், திராவிட முன்னேற்றக் கழகம் ஆகியவற்றுக்கு இந்திய அரசாங்கம் மதிப்புக்கொடுத்துவருவதை நான் அறிவேன். இதைக் கண்டு நான் ஆச்சரியப்படவில்லை. தங்களது கொள்கையை விஸ்தரிப்பதற்காக இந்திய அரசாங்கம் இவற்றுக்கு மதிப்புக் கொடுக்கிறது.

இலங்கையை ஒரு காலனியாக்கவே இந்தியா எப்பொழுதும் விரும்புகிறது. நேபாளம், பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கெதிரான இந்தியாவின் செய்கைகளை உலகம் பூராவுமே நன்கு அறியும். சீன-இந்திய எல்லைத் தகராறில் இந்தியாவின் வெளிவேடத்தையும் உலகும் அறியும்."

### இந்திய ஹைகமிஷன் அதிகாரி கருத்து

இதுசம்பந்தமாக இந்திய ஹைகமிஷனைச் சேர்ந்த உயர் அதிகாரியொருவர் தெரிவிக்கையில், கடந்த காலத்தில் பல ஸ்தாபனங்கள், ஹைகமிஷனிலிருந்து திரைப்படங்கள் வாங்கினர்கள் என்றும் திரு. ராஜரத்தின தெரிவித்திருப்பதுபோல குறிப்பிட்ட ஒரு நோக்கத்துக்காக இந்திய ஹைகமிஷன் அந்த ஸ்தாபனத்துக்குத் திரைப்படம் கொடுக்கவில்லையென்றும் கூறினர்.


## வரி விளம்பரம்

### தேவை

குளிர்பானங்கள் டெலிவரி செய்வதற்கு சொந்தத்தில் சைக்கிள் வைத்திருக்கும் வாலிபர்கள் தேவை. நாளொன்றுக்கு ரூ. 5 முதல் ரூ. 10 வரை சம்பாதிக்கலாம். விபரங்களுக்கு: நம். 34, மெயின் வீதி, யாழ்ப்பாணம். 852

### தொய்வு: நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனம். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50. வைத்தியர் பரிபூரணநாதர் கைலாயபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.


## மாணவத் தாதிகளின் வகுப்பறை விடுதிச்சாலையாக உபயோகம்

யாழ்ப்பாணம், புதன்

நேற்று இரவு நடைபெற்ற யாழ்ப்பாணத் தாதிமார்களின் பாடசாலையில் முதல் பட்டதாரிகளின் பட்டமளிப்பு விழாவில் பாடசாலை அதிபர் திருமதி வல்லிபுரம் தமது அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டார்:-

பொதுசன விருப்பிற்கிணங்கவும் அரசியல் நிர்ப்பந்தங்களின் பேரிலும் ஆங்கிலம் மூலம் போதனையளிக்க வேண்டிய இப் பாடசாலை தமிழ் மூலம் போதனை அளிக்கப்படுமொன்றாக 34 மாணவிகளுடன் 1958-ல் ஸ்தாபிக்கப்பட்டது. மாணவிகளின் தொகை 82 ஆகக் கூடியும் போதனையாளரின் தொகை ஸ்தம்பித்த நிலையிலேயே இருக்கிறது. ஆனல் இவ் ஆஸ்பத்திரி டாக்டர்களினதும் தற்காலிக போதனையாளர்களினதும் பெருஞ் சேவை காரணமாக குறைவற நடாத்தக் கூடியதாயிருக்கிறது.

மேலும் மாணவத் தாதிகள் நிரந்தரமாகப் பாடசாலையிலேயே தங்கவேண்டியிருந்தும் விடுதி வசதியற்ற நிலையில் அவர்கள் வகுப்பறையையும் விடுதிச்சாலையாக உபயோகிக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. அநேக மாணவிகளே அடிப்படை ஆங்கில அறிவும் விஞ்ஞான அறிவும் அற்றவர்களாய் இருந்தமையால் அப் போதனைக்கு தாமாக முன்வந்து இலவசமாக உதவிய வெளி ஆசிரியர்களுக்கு இப்பாடசாலை பெரிதும் கடமைப்பட்டுள்ளது.

1956 ல் ஆரம்பிக்கப்பட்ட மாணவத்தாதிகளின் விடுதிச்சாலைக்கட்டடம் இன்னும் முடிவற்றநிலையிலிருப்பதும் மேலும் தெரிவுகள் நடாத்தி மாணவிகளைச் சேர்ப்பதும் பிரச்னையை உண்டாக்குவதாகும். அடுத்துக் வரும் செப்டம்பர் மாதத்துக்குள்ளாவது இக் கட்டடங்கள் முடிவுபெறச் சௌக்கிய இலாகா உதவி புரியுமெனக் காத்திருக்கிறோம். இத்துடன் மேலும் பிரச்னைக்குரிய விடயங்கள் போதனையாளரின் பற்றுக்குறையும் தமிழில் மருத்துவ விஞ்ஞானப் பாடப்புத்தகமின்மையுமே.

## பொலிஸ்கோஷ்டிக்கு வெற்றி

வவனியா, புதன்

வவனியா நீர்ப்பாசன இலாகா விளையாட்டுக்கழகம் கைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியை ஆரம்பித்துள்ளது.

வவனியா நீர்ப்பாசன இலாகாக் கோஷ்டிக்கும் பொலிஸ் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற போட்டியில் பொலிஸ் கோஷ்டி 2—0 கோல்களால் வெற்றியீட்டியது. திரு. ராஜசிங்கம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

தபால் இலாகாக் கோஷ்டிக்கும் விவசாயப்பகுதிக் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற போட்டியில் விவசாயப்பகுதி 2—1 கோல்களால் வெற்றியீட்டியது. திரு. ஐயம்பிள்ளை மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

சிங்கள மகாவித்தியாலயக் கோஷ்டிக்கும் கல்வி இலாகாவுக்குமிடையே நடைபெற்ற போட்டியில் கல்வி இலாகா 2—0 கோல்களால் வெற்றி பெற்றது. திரு. ஐயம்பிள்ளை மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

## பசித்த குழந்தைக்கு மீன் மாவு

லண்டன், ஏப். 3

பசியால் வாடும் குழந்தைகளுக்குப் புரதச் சத்து நிறைந்த மீன் மாவு தரலாமென்று ஐ. நா. சபையின் குழந்தைகள் சேமவளக்கழகம் அறிவிக்கிறது. மேற்படி மீன் மாவைப் பதனப்படுத்தப்பட்ட மீன்களிலிருந்து செய்யலாம் என்றும் அக்கழகம் கூறுகிறது. மீன்களை மாவாக்குவதன் மூலம் உலகத்தின் மீன்வளத் தொழிலில் சீரான வியாபாரத்தை உண்டாக்கத் துணை புரியலாம்.

உலகின்பல பகுதிகளில் உள்ள விஞ்ஞானிகள் மீன் மாவு செய்வது குறித்து ஆராய்ச்சி செய்துவருகின்றனர். பிடித்ததும் தேவையில்லையெனக் கடலில் எறியும் மீன்களிலிருந்து இம் மாவைச் செய்யலாம். இம்மாவு கெடாமலும், பல இடங்களுக்கு அனுப்பத் தோதாகவும் இருக்கும். இதில் புரதச் சத்து நிறைய இருக்கிறது.

# 'துணி மோசடிபற்றி வெட்கப் படுகிறேன்'

## பார்லிமெண்டில் வர்த்தகமந்திரி

கொழும்பு, புதன்

"கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தின் ஜவுளி விற்பனையில் பெரும் மோசடி நடைபெற்றுள்ளது குறித்து தாம் வெட்கப்படுவதாக உணவு வர்த்தக மந்திரி திரு. டி. பி. இலங்கரத்தின நேற்று ஜனப்பிரதிநிதிகள் சபையில் கூறினர்.

'சிங்கள இந்து புதுவருட சமயத்தில் ஜவுளி விலைகள் அதிகரிப்பது வழக்கம். எனினும் புதுவருடப் பிறப்பு நெருங்கும் நாட்களில் விலைகள் இறங்கிவிடும் என நான் உறுதி கூறுவேன்' என மந்திரி திரு. இலங்கரத்ன கூறினர்.

திரு. இலங்கரத்ன மேலும் பேசகையில் கூறியதாவது:-

கூட்டுறவு மொத்த விற்பனவு இலாகாவில் கடமையாற்றும் அதிகாரி ஒருவர் மொத்த வியாபாரிகளுக்கு பல தொகையான அளவு ஜவுளியை விற்றிருக்கிறர். கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்திடம் ஜவுளி விலையை அதிகரிக்குமாறு தனிப்பட்ட உத்தரவு பிறப்பித்துள்ளார். சாரங்களின் விலைகளும் உயர்த்தப்பட்டது.

இது சம்பந்தமாக குறிப்பிட்ட அதிகாரி தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளார். விசாரணை தொடர்ந்து நடைபெற்றுவருகிறது.

## இலங்கையில் குளிர்சாதனப் பெட்டி

கொழும்பு, வியாழன்

இலங்கையில் இலங்கையர்களால் தயாரிக்கப்பட்ட குளிர்சாதனப் பெட்டிகளின் விற்பனை இன்று ஆரம்பிக்கப்பட்டது. முற்றிலும் இலங்கையர்களைக்கொண்ட ஸ்தாபனத்தினல் உள்ளூரில் தயாரிக்கப்பட்டுள்ள இந்தகுளிர்சாதனப் பெட்டிகள் ஒவ்வொன்றின் விலை ரூ. 1500 என அறிவிக்கப்பட்டுள்ளது.

குளிர்சாதனப் பெட்டிகளைத் தயாரிக்கும் இந்த ஸ்தாபனம் வாகனங்களை இயக்கும் பாட்டரிகளையும் தயாரிக்கும்.

யா. ஆ. தி. பா. ச. பரீட்சைகள்

# புதிய பரீட்சைக்குழு நியமிக்கப் படவேண்டும்

## நாவலர் பாடசாலை ஆசிரிய சங்கத்தின் பிரேரணைகள்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷா சங்கத்தார் நடத்தும் சமஸ்கிருத பரீட்சைக்கு உதவி வித்தியாதிபதி தலைமையில் உள்ள ஒரு புறம்பான பரீட்சைக்குழு ஒன்று நியமிக்கப்படவேண்டும் என்று வண்ணை நாவலர் பாடசாலை ஆசிரிய சங்கம் ஆலோசனை தெரிவித்துள்ளது. இச்சங்கத்தின் தலைமை ஸ்தானத்தை யாழ்ப்பாணத்திலே அமைத்து இச்சங்கத்தின் கண்காணிப்பில் பரீட்சைகளைத் தொடங்கி நடாத்த வேண்டுமெனவும் நாவலர் பாடசாலை ஆரிய திராவிட பாஷா சங்கத்திற்கு அனுப்பிவைத்துள்ள ஆலோசனைப் பிரேரணைகள் மூலம் தெரிவித்துள்ளன.

யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷா சங்கத்திற்கு அனுப்பிவைத்துள்ள ஆக்கப் பிரேரணைகளில் நாவலர் பாடசாலை ஆசிரியர் சங்கம் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:-

இந்த நிலைக்கு மாருக இப்போது ஒரு குழு பரீட்சைகளை நடத்தவும் வகுப்புக்களை ஆயத்தம் செய்யவும் ஒருங்கமைந்த காரணத்தால் தகுதியற்றவர்கள் சித்தியை எதிர்பார்க்கவும், தகுதியான அறிவுள்ள பலர் தாக்கப்படவும் ஒழுகீனங்கள் நடைபெறுவதாகவும் ஒரு சிலரின் சயநலங்களுக்காக பரீட்சைகள் வழிநடத்தப்படுவதாகவும் புகார்கள் வெளிவருகின்றன. அந்த நிலை மேலும் நிகழாதவாறு பாதுகாப்பது சங்கத்தாரின் முக்கிய கடமையாகும். இச்சங்கததின் பெயரால் ஒரு சிலர் சுயநலங்கட்கு இடங்கொடாது சங்கத்தின் கௌரவத்தைப் பாதுகாப்பது சிறந்த இந்த ஸதாபனத்தின் இலட்சியமன்றோ.

மாணவர்கள் பரீட்சையிற் சித்தி டைவதிலும் பார்க்க பரந்த அறிவு பெறச் செய்வதே முக்கிய நோக்கமாதல் வேண்டுமென்பதைப் பரீட்சைக்கு வகுப்பை நடாத்துபவர்கள் கண்டிப்பாகக் கருத்திற் கொள்வது மிக அவசியம்.

ஆகவே பரீட்சைக்குழு ஒன்று கனம் உதவி வித்தியாதிபதி அவர்கள் தலைமையில் வித்துவான் ந. சுப்பையாபிள்ளை, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை போன்ற பொறுக்கியெடுத்த மிகக் கண்ணியமானவர்களைக் கொண்டமைதல் வேண்டும். மேலும் தேவையானல் இந்திய பல்கலைக்கழகங்களிலிருந்தும் தெரிவு செய்யப்படலாம்.

பரீட்சை நடாத்துபவர்களே பரீட்சைக்கு மாணவர்களை ஆயத்தஞ் செய்துவெற்றி பெறச்செய்யும் முறை பரீட்சை ஒழுங்குகளுக்கு மாருனதும் இச்சங்கத்தின் கௌரவத்துக்குப் பங்கமானதுமாகுமென்பது உண்மை.

பின்வருவனவற்றை இச்சங்கம் நடைமுறைக்குக் கொண்டுவருதல் வேண்டுமென விண்ணப்பிகின்றோம்.

யா. ஆ. தி. பா. சங்க நிர்வாக சபையாருக்கும், பரீட்சகர் குருவுக்கும் பரீட்சை முறையிலன்றி ஒழுங்கீனமாகத் தொடர்பு ஏற்படாது பாதுகாக்கப்படவேண்டும்.

கல்வி ஸ்தாபனங்கள் வகுப்புகளை நடாத்துவதேயன்றிப் பரீட்சிக்கும் சபை வகுப்பை நடாத்தும் முறை நீக்கப்படவேண்டும். பரீட்சைகள் நடுநிலை தவருத குழுவினல் அந்தரங்கமாக நடாத்தப்படுதலே முறையானதாகும்.

இச்சங்கம் தமிழ் சமஸ்கிருத நூல்களை அச்சேற்றி வெளியிடும் பணியையும் மேற்கொள்ள வேண்டும் என்பது எங்கள் விநயமான விண்ணப்பமாகும்.

## சுட்டுக் கொன்றதாய் குற்றச்சாட்டு

### தோட்டத் துரைக்கு ஜாமீன் மறுப்பு

காலி, புதன்

துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்த ஒரு சம்பவம் காரணமாக ஒரு தோட்டத் துரையையும், மற்றும் இருவரையும் ஜாமீனில்விட காலி மாஜிஸ்டிரேட் திரு. பி. எஸ். சி. ரத்வத்தை மறுத்துவிட்டார்.

பத்தேகம, பிவகொடவேலி தோட்ட மானேஜரான ஆர். எம். விண்டர், பி. கே. உபசேன, எம். கே. பெர்னுர்ட் ஆகியோரை இன்ஸ்பெக்டர் ஏ. திஸ்ஸநாயகா மாஜிஸ்டிரேட் முன் ஆஜர் செய்தார். கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு வரக்காபிட்டி சந்தைக்கிருகில் யு. ஜி. அல்பர்ட் என்பவரை துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்ததாக இவர்கள்மீது குற்றஞ்சாட்டப்பட்டது.

தலையில் குண்டுக் காயங்களுடன் தனது குடிசையில் அல்பர்ட் இறந்துகிடக்கக் காணப்பட்டார்.

வைத்திய காரணங்களுக்காக திரு. விண்டரை ஜாமீனில் விடுதலைசெய்ய வேண்டும் என திரு. டபிள்யு. டி. விஜயகுலசூரியா கேட்டுக்கொண்டார். இருதய நோய் காரணமாக விண்டர் காலி ஆஸ்பத்திரியைச் சேர்ந்த டாக்டர் விஜேசேகராவிடம் சிகிச்சை பெற்றுவருவதாகக் கூறப்பட்டது.

பொலீஸார் தங்கள் விசாரணையை முடிக்கவில்லை எனக் கூறி காலி ஏ. எஸ். பி. திரு. பிரேங்க் சில்வா ஜாமீனில் விடுவிக்கப்படுவதை ஆட்சேபித்தார். எனவே, இன்றுவரை எதிரிகள் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

## ஹங்கேரிக்கு பிரதமரின் வாழ்த்துச்செய்தி

கொழும்பு, வியாழன்

ஹங்கேரியின் தேசிய தினத்தை முன்னிட்டு இலங்கை பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா ஹங்கேரி ஜனதிபதிக்கு வாழ்த்துச் செய்தியொன்றை அனுப்பியுள்ளார்.

## நீச்சல் வீரருக்கு வரவேற்பு

கோண்டாவில், வியாழன்

கோண்டாவில் கிழக்கு சரஸ்வதி சனசமூக நிலையத்தின் நிர்வாகசபைக் கூட்டம் சென்ற புதன் கிழமை நிலையத்தலைவர் திரு. நா. அருட்செல்வம் தலைமையில் நடைபெற்றபோது நீச்சல் வீரர் ஆனந்தனுக்கு வரவேற்பு அளிப்பதென்னும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

# பாரதத்தில் சப்மரீன் அணி அமைக்க கமிட்டி

## 6 புதிய தளவாடத் தொழிற்சாலை
## முப்படைகள் இருமடங்கு வலுவடையும்

புதுடில்லி, ஏப்ரல் 4

**பாரதத்தைப்போல் சீனவும் கொழும்பு யோசனைகளை எதுவித மாற்றமும் இல்லாது ஏற்றுக் கொண்டால்தான் இதுபற்றி அடுத்த அம்சங்களை ஆலோசனை செய்ய முடியும் எனப் பாரதப்பிரதமர் நேரு லோகசபையில் தெரிவித்தார்.**

சீனவிலுள்ள 3213 இந்தியக்கைதிகளை விடுதலை செய்வதுபற்றி இந்திய அரசாங்கத்துக்கு தகவல் கிடைத்திருப்பதாக ஸ்ரீநேரு குறிப்பிட்டுப் பேசுகையில் சீனவிலுள்ள சகல இந்தியக் கைதிகளும் விடுதலை செய்யப்பட்டுவிட்டார்கள் என இப்பொழுதே கூறிவிட முடியாதென்றும் இதுபற்றி ஆராய்ந்த பின்னரே கூறமுடியும் என்றும் கூறினர்.

இந்தியாவிலுள்ள சீனர்கள் தாமாக சீனவுக்குச் செல்ல விரும்பினல் அவ்வாறு செல்ல அனுமதிக்கப்படுவார்களென்றும் இவ்விதம் விரும்பாத சீனர்கள் கட்டாயப்படுத்தப்பட மாட்டார்களென்றும் நேரு தெரிவித்தார்.

### வீரர்களுக்கு வரவேற்பு

பலமாதங்களுக்கு சீனவில் சிறையிலிருந்துவிட்டுப் பாரதத்துக்குத் திரும்பும் பாரத ஜவான்களைத் தகுந்த முறையில் வரவேற்போம் என நேரு குறிப்பிட்டார்.

### யுகோஸ்லேவியா உதவி

யுகோஸ்லேவியா பாரதத்துக்கு ஆயுத தளபாடங்கள் உதவிசெய்ய சம்மதித்துள்ளது பற்றி தெரிவித்துவிட்டு இதுபற்றி இப்பொழுது ஆலோசனை செய்துவரப்படுகிறது என பாரதப்பிரதமர் கூறினர்.

### தளவாடத் தொழிற்சாலை

பாரதத்தில் மேலும் 6 ஆயுத தளவாடத் தொழிற்சாலையை நிறுவ ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாக பாதுகாப்புமந்திரி திரு. சாவன் தெரிவித்துள்ளார்.

### படைப் பெருக்கம்

படைப் பெருக்கம்பற்றி திரு. சாவன் மேலும் தெரிவித்ததாவது: இராணுவப்படை, கடற்படை, விமானப்படைகளையும் இப்பொழுது இருப்பதைவிட இருமடங்கு பலப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்தப்படைகளுக்கு முக்கியமாக விமானப் படைக்கு ஆள்திரட்டும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. உள்நாட்டில்சப்மரீன் அணி ஒன்றைத் தயார் செய்யக் கமிட்டி ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. மலைகளில் சண்டை செய்வதற்கு உதவும்வகையில் குதிரைகள், கோவேறுகழுதைகள் ஆகிய மிருகங்கள் முக்கப்பட்டுவருகின்றன.

### ஐக்கியம் அவசியம்

சண்டை நிறுத்தப்பட்டுவிட்டது என நினைத்து நாம் நமது சுறுசுறுப்பைக் குறைத்துவிடக்கூடாது என உள்துறைமந்திரி திரு. லால்பகதூர் சாஸ்திரி மக்களைக் கேட்டுக்கொண்டிருக்கிறர். வெள்ளம், தீ உதவிஸ்தாபனங்கள் தமது உதவிகளை அதிகரிக்கக்கூடிய வகையில் தமது வசதிகளை விஸ்தரித்துக் கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார்.

இவ்வித நெருக்கடியான நேரத்தில் நாட்டின் ஐக்கியம் ஒற்றுமை மிக அவசியம் என்றும் இவற்றை வலுப்படுத்த மக்கள் உழைக்கவேண்டுமென்றும் அவர் வலுவுறுத்தியுள்ளார்.

### நடுத்தர எஃகு சாலைகள்

பெரிய எஃகுசாலைகளுக்கு உதவியளிக்கக்கூடிய வகையில்புதிதிய நடுத்தரசாலைகளை பல இடங்களிலும் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக எஃகு கனரக தொழில் மந்திரி திரு. ஸி. சுப்பிரமணியம் அறிவித்துள்ளார்.

தென்நாட்டில் அமைக்கப்படவிருக்கும் எஃகு உற்பத்திச்சாலை சிறிதாக இருக்கமாட்டாது என்றும் மூன்றிலிருந்து ஐந்துலட்சம் டன் வரை உற்பத்திசெய்யக்கூடியதாக இருக்குமென்றும் தெரிவித்துள்ளார்.

### அமெரிக்க உதவி

அமெரிக்கா, பாரதம், பாகிஸ்தான் துருக்கி ஆகிய தேசங்களுக்கு அளிக்க இருக்கும் 116 கோடி டாலர் உதவியில் பாரதத்துக்கு பெருமளவு உதவி அளிக்கப்படுமென அறிப்படுகிறது.

### பகை நாகர் சீனருக்கு ஆதரவு

நாகலந்து நிர்வாகசபைத் தலைவர் திரு. சின்வாவோ, பகைநாகர்கள் சீனருக்கு ஆதரவு அளித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இவர்களிடம் கண்டுபிடிக்கப்பட்ட தஸ்தாவேஜுகள் சில இந்த இரகசியத்தை வெளிப்படுத்தியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

## ரஷ்ய ராக்கெட் இன்று சந்திரனை அடையும்?

மாஸ்கோ, ஏப்ரல் 4

சந்திரமண்டலத்தை நோக்கி சென்ற திங்கட்கிழமை ரஷ்யாவினல் அனுப்பப்பட்ட லூன்-4 என்ற ராக்கெட் பூமியிலிருந்து ஒரு லட்சத்து 35 ஆயிரம் மைல் தூரத்தில் பறந்துகொண்டிருப்பதாகவும் அடையவேண்டிய தூரத்துக்கு அரைப்பங்குக்குமேல் சென்று விட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த ராக்கெட் நாளை சந்திரமண்டலத்தை அடைந்து விடும் என அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

**வேல் போன்ற வடிவம்**

சந்திரன் வேல்போன்ற வடிவத்தில் இருப்பதாகவும் இதில் பெரும்பகுதி பூமியை நோக்கியிருப்பதாகவும ரஷ்ய பத்திரிகையான டாஸ் தெரிவித்துள்ளத.

மனிதன் சந்திரனை அடையும் காலம் அணுகிவிட்டது என ரஷ்ய வானெலி ஒலிபரப்பியுள்ளது.

**ககாரின் கருத்து**

ரஷ்ய முதலாவது வான வெளி வீரர் மேஜர் ஜுரி ககாரின் மனிதன் சந்திரமண்டலத்துக்கு செல்வது பற்றி அபிப்பிராயம் தெரிவிக்கையில் முதலில் பலவித ராக்கெட்டுகள் சந்திரமண்டலத்துக்கு அனுப்பப்பட்டு பரீட்சை செய்த பின்னர்தான் சந்திரமண்டலத்துக்கு செல்லும் முயற்சி எடுக்கப்படும் என்றுர்.

## ஒன்றரைக்கோடி ஆண்டுகளுக்கு முன்வாழ்ந்த பிராணி

வாஷிங்டன், ஏப். 3

சுமார் ஒன்றரைக்கோடி வருடங்களுக்கு முன்பாக உலகில் வாழ்ந்த பிராணிகளின் எலும்புகள், மற்றும் இப்பிராணிகளின் தடயங்கள் ஆகியவை ஆபிரிக்காவிலுள்ள கென்யாவில் கண்டுபிடிக்கப்பட்டன. வரலாற்று ஆராய்ச்சி நிபுணரான டாக்டர் லூயி லீக்கே என்னும் பிரிட்டிஷ்காரர் இவற்றைக்கண்டு பிடித்துள்ளார். தற்போது உள்ள நீர் யானையைப் போன்ற பிராணி, குட்டையான ஒட்டைச் சிவிங்கி ஆகியவற்றின் எலும்புகள் இவ்வாறு கென்னியாவில் உள்ள போர்ட்டெர்னன் என்னுமிடத்தில் கிடைத்ததாக டாக்டர் லூயி லீக்கே பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்தார். இந்த இடத்தில் பெருமளவுக்கு தடயங்கள் கிடைத்துள்ளது குறித்து அவர் ஆச்சரியம் தெரிவித்தார். தண்ணீர் குடிக்கச் சென்ற இடத்தில் நிலத்துக்குள்ளிருந்து கிளம்பிய விஷவாயு இந்தப் பிராணிகளைச் சூழ்ந்ததால் இவை இறந்திருக்கலாம் என்று டாக்டர் லூயி லீக்கேகருத்துத் தெரிவித்தார்.

—

புதுடில்லி, ஏப். 3

மதுவிலக்கு ரத்து செய்யப்படவேண்டுமென நாட்டில் சிலர் கூறி வருகின்றனர். ஆனல் மதுவிலக்கு ரத்து செய்யப்பட்டால் அது அறநெறித்தோல்வியாக இருக்குமென திட்ட மந்திரி திரு. குல்ஸாரிலால் நந்தா ராஜஸ்தான் பாரத்தேவா சமாஜத்தின் நான்காவது வருடாந்தக் கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

தலைக்கு 5 மட்டுமே ஒரு மாதத்தில் கிடைக்குமென்றும் தெரிய வருகிறது. இறைச்சி இல்லாமலே உண்டு உணவுப் பற்றாக் குறையைச் சமாளித்து வருகின்றனர்.

## திருடனைக்காட்டிக் கொடுக்கும் கார்!

சிங்கப்பூர், ஏப். 3

சமீபகாலமாக மலாயாவில் கார் திருட்டு அதிகமானதைத் தொடர்ந்து இதைத் தடுக்கும் வகையில் கார்களில் திருட்டுத் தடுப்புக்கருவி பொருத்தப்பட்டுவருகிறது. இந்தக் கருவி பொருத்தப்பட்ட காரை திருட முயற்சிக்கும் ஆசாமி காரின் கதவையோ அல்லது காரின் என்ஜின் மூடியையே திறந்தால் உடனே காரின் 'ஹார்ன்' இயங்க ஆரம்பித்து சத்தம் கிளப்பும். இச்சத்தம் அக்கம்பக்கத்தில் உள்ளவர்களின் கவனத்தைக் கவருமாதலால் கார் திருட்டு தடுக்கப்படும். இந்தக் கருவியின் விலை ரூ. 15 தான். பிரிட்டனில் பெரும்பாலான கார்களில் இக்கருவி பொருத்தப்பட்டதைத் தொடர்ந்து கார் திருட்டு பெருமளவுக்கு தடுக்கப்பட்டுள்ளது.

## தென்னபிரிக்காவில் முதல் பெண் வக்கீல்

டிபன், ஏப். 1

தென்னபிரிக்காவின் நேட்டால் பல்கலைக்கழகத்தில் சட்டம் படித்து முதல் இந்தியப் பெண் வக்கீலாக ஜுபி சீடட் பட்டம் பெற்றுள்ளார். தென்னபிரிக்காவிலேயே சட்டத்தில் பட்டம் பெற்ற வெள்ளையரல்லாத முதல் பெண்ணும் இவர் ஆவார். இவர் வழக்கறிஞராகப் பணிபுரியும் அனுமதியும் பெற்றுள்ளார்.

இவருடைய தந்தை தென்னபிரிக்காவிலுள்ள டர்பனில் புகழ் பெற்ற இந்திய டாக்டர் ஆவார். ஜுபி அவருடைய மூன்றாவது குழந்தையாகும். ஜுபி ஆபிரிக்காவில் பல நாடுகளுக்கும், ஐரோப்பாவுக்கும் 1956-ல் சென்று வந்தார்.

## 97 வயதில் காரோட்டுவதை நிறுத்தியவர்

நியூயார்க், ஏப். 3

97 வயதான டேவிட் சதர்லேண்டு என்பவர் தனது 60 ஆண்டு அனுபவத்தில் முதல் முறையாகச் சாலை விதிகளின்படி நடக்கத்தவறினர் என்று சுமார் ரூ. 12 அபராதம் விதிக்கபெற்றர். இதைத் தொடர்ந்து இவர் இனிக் காரோட்டப் போவதில்லை என்று முடிவு செய்துள்ளார். அவர் செய்த குற்றம் "நில்" குறியைக் கவனியாது காரோட்டியதுதான்.

## புதுக்கண்டம் கண்டுபிடிக்கும் முயற்சி

லண்டன், ஏப். 4

ஆஸ்திரேலியாவை நோக்கி 1769-ம் ஆண்டில் "எண்டவெர்" என்ற பெயருடைய கப்பலில் கேப்டன் குக் என்பவர் புதுக்கண்டம் தேடிப்புறப்பட்டார். அது போன்ற கப்பலில் தானும் குக்கின் வழியில் ஆஸ்திரேலியா செல்லமுடியுமாவென கமாண்டர் ஆலன் வில்லியர்ஸ் என்பவர் ஆராய்ந்துவருகிறர்.

கமாண்டர் ஆலன் 1957 ல் அட்லாண்டிக்கைக் கடந்து ஆதி "மே பிளவர்" கப்பலின் பணியில் கட்டப்பட்ட கப்பலில் அமெரிக்காவுக்குச் சென்றர்.

1770-ம் ஆண்டு ஆஸ்திரேலியா கண்டுபிடிக்கப்பட்டதன் நினைவாகக் கொண்டாடப்படவிருக்கும் இரண்டாவது நூற்றாண்டு விழாவையொட்டி இப் பயணத்தை நிகழ்த்தவி

## திறந்த வெளிச் சிறைச்சாலை

ஹைதரபாத், ஏப். 3

ஹைதரபாத்துக்கருகே திறந்த வெளிச் சிறைச்சாலை ஒன்றை அமைக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த திறந்த வெளிச் சிறைச்சாலையில் 500 கைதிகள் இருக்கக்கூடிய வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ருக்கும் திட்டத்தில் ஆஸ்திரேலிய அரசாங்கமும், ஆஸ்திரேலிய ராயல் வரலாற்றுக் கழகமும் அக்கறை காட்டுகின்றன.

"காப்டன் குக் சென்ற அதே கடல் வழியில் கொம்பு நிலமுனைக்குக் கீழிருக்கும் கடினமான கடற்பகுதி வழியாகவும் கூட நான் செல்வேன்" என்று கமாண்டர் வில்லியர்ஸ் கூறியுள்ளார்.

கப்பலுக்கான மாலுமிகளைத் தேர்ந்தெடுக்கும் வேலையைக் கூட அவர் ஏற்கனவே செய்து விட்டாராம்.

## பால், ரொட்டி பங்கீடு

வியன்ன, ஏப். 1

பல்கேரியாவில் பங்கீட்டு முறையைச் செயல்படுத்துவதற்கான எல்லா ஏற்பாடுகளும் தயாராகிவிட்டதாக ரோசபியா செய்திகள் கூறுகின்றன.

உணவு உற்பத்திக்கென உயர்ந்த இலட்சிய அளவு தீர்மானித்துங்கூட, கடந்த மூன்ருண்டுகளில் பல உணவுப் பொருள்களில் பற்ருக்குறை ஏற்பட்டுள்ளதையொட்டிப் பங்கீட்டுமுறை பல்கேரியாவில் வருகிறது.

தலைநகருக்கு வெளியில் சில மாவட்டங்களில் ரொட்டித் தட்டுப்பாடு காரணமாக சில பகுதிகளில், ரொட்டியும் பங்கீட்டுமுறைக்குக் கொணரப்பட்டுள்ளது. மாநிலங்களில் குழந்தைகளுக்கும், நடமாட முடியாதவர்களுக்கும் மட்டுமே பால் தரப்படுகிறது. பாலாடைக்கட்டிக்கும் பங்கீடு வரலாமென்றும், முட்டைகள்

### மணி வாக்கு

நேர்முக நடவடிக்கையின்றி உலகிலே எதுவும் செய்யப்பட்டதில்லை. 'சாத்வீக எதிர்ப்பு' எனும் சொல்லிலே போதிய அளவு கருத்து இல்லாமையாலும், அது பலவீனர்களின் ஆயுதம் என்று கருதப்படுவதாலும், அச்சொல் எனக்குப் பிடிக்கவில்லை.

— மகாத்மாகாந்தி


ஈழநாடு

EELANADU National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் சுபகிருது ஆண்டு பங்குனி மீ 23 உ. (5-4-63)


## மாஸ்கோவும் பீக்கிங்கும்

சீனத்தின் அழைப்பை ரஷ்யா மிக மரியாதையாக நிராகரித்துவிட்டது. தங்கள் இருநாடுகளுக்குமிடையே ஏற்பட்டுள்ள கருத்து வேற்றுமைகளைக் குறித்து நேரில் பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டுமென்றும், கம்யூனிஸ்ட் நாடுகளுக்கிடையே வேற்றுமைகளை வளரவிடக் கூடாதென்றும் ஆகவே பீக்கிங்குக்குவந்து பேச வேண்டுமென்றும் ரஷ்ய பிரதமர் குருஷ்சேவை சீனகம்யூனிஸ்ட்கட்சி அழைத்தது.

இவ்வித வேற்றுமை வளருவதை ரஷ்யாவும் விரும்பவில்லை. என்றாலும் பீக்கிங்குக்கு வரவேண்டுமென்ற அழைப்பை குருஷ்சேவ் ஒப்பாமல், மாஸ்கோவுக்கு சீன அதிபர் மாசேதுங்கோ அல்லது உயரிய கட்சித் தலைவர்களோ வரவேண்டுமென்றும் இப்போது மாசேதுங் வரமுடியாவிடில் மே மாத 15-ந்திகதி வாக்கிலே அதிகாரிகள் பேசலாமென்றும் மாஸ்கோ கம்யூனிஸ்ட்கட்சி அனுப்பியுள்ள பதில் உண்மையில் பீக்கிங்கின் அழைப்பை மறுத்துவிட்டதேயாகும்.

மார்ச் 9-ந் திகதி பீக்கிங் அனுப்பிய கடிதத்துக்கு, மூன்று வாரங்கள் கழித்தே மாஸ்கோ இந்தப் பதிலை அனுப்பியுள்ளது. இவ்விரு முக்கிய கம்யூனிஸ்ட் நாடுகளுக்கும் ஏற்பட்டுள்ள வேற்றுமையும் பிணக்கும் கம்யூனிஸ இயக்கத்துக்குப் பெரும் பாதகமேற்படுத்துமெனினும், இப்பேச்சுகளை உடனடியாக நடத்த மாஸ்கோ ஆவல் காட்டவில்லை. அவ்வித ஆவல் ரஷ்யாவுக்கு இருக்குமாயின், பீக்கிங் அழைப்பை அது மறுத்திராததுடன் இரு தேசங்களுக்குமிடையே பேச்சுகள் நடத்துவதை இன்னும் ஐந்தாறு வாரங்களுக்கு ஒத்திவைத்திருக்கமாட்டாது.

ரஷ்யாவின் இந்தப்போட்டி அழைப்பை சீனம் ஏற்குமா என்பது தெரியவில்லை. இடையிலே பீக்கிங் வானொலி மறைமுகமாக ரஷ்யாவைத் தாக்கிச் செய்யும் பிரசாரத்தை நிறுத்தினால்தான், இனி சமரசத்துக்காக பேச்சுகள் எங்கு நடந்தாலும் வெற்றிபெற முடியும். இன்றேல் இருதேச பிரதிநிதிகளும் கூடிப் பேசவதே முடியாது போவதுடன் கம்யூனிஸ்ட் நாடுகளுக்கிடையிலே பிளவுகள் அதிகரிக்கவும் கூடும். பீக்கிங்கின் ஆத்மசுத்தியில் மாஸ்கோவுக்கு நம்பிக்கையில்லை. அந்த நம்பிக்கையை மீண்டும் ஏற்படுத்த வேண்டிய பொறுப்பு பீக்கிங்கைச் சேர்ந்தது.

எந்த விஷயத்திலும் கருத்து வேற்றுமைகள் ஏற்படுவது இயற்கை. ஒருவரது கருத்தே அவரது அனுபவம், சூழ்நிலை காரணமாகப் பின்னர் மாறவும் கூடும். அப்படிக் கருத்து வேறுபாடுகள் கொண்டவர்களைத் தூற்றி, அவர்களுக்கு விரோதமாகப் பிரசாரம் செய்வது ஒற்றுமைக்கு உதவாது. உலகம் ஒரு குடும்பமாக ஒன்றுகிவாழ வேண்டிய நாளை நோக்கி வேகமாகச் சென்று கொண்டிருக்கிறது. காலச் சக்கரத்தின் இந்த வேகமான சுழற்சியிலே ஏற்படும் மாறுதல்கள் கொஞ்சமல்ல. நாளுக்குநாள், மணிக்குமணி நிலைமையை உணர்ந்து, அதற்குத் தக்கபடி, தாராள மனதுடன் பரஸ்பரம் விட்டுக் கொடுத்து வாழ்வதே ஒற்றுமைக்கும் முன்னேற்றத்துக்கும் நல்ல வழியாகும். அதைவிட்டு, நான் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்றபடி, பிடிவாதமாகவும் கண்மூடித்தனமாகவும் இருப்பின் அது தற்கொலைச் சண்டைக்கும் அழிவுக்குமே வழிகாட்டும்.

மன்னர் ஆட்சி, குடிஅரசு, ஜனநாயகம், கம்யூனிஸம் முதலிய பல அரசியல் அமைப்புகள்பற்றி மக்களிடையே கருத்துவேற்றுமைகள் இருக்கலாம். என்றாலும் ஆட்சிமுறைகள் மக்களின் நன்மைக்காக ஏற்பட்டனவேயன்றி, ஆட்சி முறைக்காக மக்களன்று. இதைஉணர்ந்து இதற்கேற்ப தங்கள் மனப்பான்மையைப் பீக்கிங் மாற்றிக்கொள்ள வேண்டிய அவசியம் அதிகரித்துள்ளது. அப்படிச் சீனம் மாற்றிக் கொள்ளாமல் பிடிவாத மனப்பான்மை காட்டுவதாயின் அது தன் நண்பர்களையும் விரோதிகளாக்கிக் கொண்டு தங்கள் மக்கள் மட்டுமன்றி உலகத்துக்கே பாதகம் செய்வதாக முடியும்.

# 'தமிழ் மட்டும் சட்டம்' தமிழர் இயற்றலாம்

## பண்டிதர் இரத்தினம் யோசனை

கொழும்பு, வியாழன்

தமிழ் மக்கள் தாங்களே "தமிழ் மட்டும் சட்டம்" இயற்றி அதை நடைமுறையில் கொண்டுவரவேண்டும் என்று பண்டிதர் கா. பொ. இரத்தினம் கொழும்பு தமிழ்ச் சங்க தமிழியக்க விழாவில் பேசுகையில் கூறினர். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:-

ஏப்ரல் எட்டாம் திகதி தொடக்கம் இலங்கை முழுவதிலும் தமிழியக்க வாரம் கொண்டாடப் பல ஒழுங்குகள் செய்யப்படுகின்றன. தமிழியக்கம் ஓர் அரசியற் கட்சிக்கோ, ஒரு குழுவினருக்கோ உரியதன்று. தமிழ்ப் பேசும் மக்கள் யாவருக்கும் உரியது. எனவே இந்தத் தமிழியக்க வாரத்தில் தமிழ்ப் பேசும் மக்கள் யாவரையும் ஒன்றுபட்டுத் தொண்டாற்றித் தமிழ்மொழி உரிமையைப் பெறுதற்கு முயலுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

சிங்கள அரசாங்கம்சிங்களம் மட்டும் சட்டத்தை நிறைவேற்றிச் சிங்களத்தைத் தமிழ்ப் பகுதிகளிலே திணிக்கிறது. தமிழ்ப் பேசும் மக்களின் தாய்மொழி உரிமையைப் பறித்து மீண்டு தராமல் இச்சிங்கள அரசாங்கம் எங்களை ஏமாற்றி வருகிறது. அன்றியும் எங்கள் கிளர்ச்சிகளைச் சிறிதும் பொருட்படுத்தாமல் எங்களை அவமதிக்கவும் தொடங்கியுள்ளது. எனவே தமிழ்ப் பேசும் மக்களாகிய நாங்கள் யாவரும் சேர்ந்து 'தமிழ் மட்டும்' சட்டத்தை வகுத்து அதை நடைமுறைக்குக் கொண்டுவருவோம். சிங்கள மக்களின பிரதிநிதிகளால் நிறைவேற்றப்பட்ட சிங்களம் மட்டும் சட்டத்துக்குத் தமிழ்ப்பேசும் மக்கள் யாவராலும் வகுக்கப்படும் தமிழ் மட்டும் சட்டம் எவ்வகையிலும் குறைந்ததாகாது, நாம் மேற்கொள்ளும் "தமிழ் மட்டும் சட்டம்" சட்டத்தை முழுதுமாக நடைமுறைக்குக் கொண்டுவருதற்கே நாம் தமிழ் இயக்கவாரம் கொண்டாட முன்வந்துளோம். தமிழியக்க வாரத்திலே எல்லோரும் எல்லா அலுவல்களையும் தமிழிலே செய்து "தமிழ் மட்டும்"சட்டத்தைச்செயற்படுத்துவோம். தமிழ்ப் பேசும் மக்களே ஒன்றுபடுங்கள், நாம் வகுக்கும் இச்சட்டத்தை நாமே போற்றி நடப்போம்.

இத்'தமிழ்மட்டும் சட்ட'த்தைப் போற்றி தமிழ்ப்பேசும் மக்கள் யாவரும் தங்கள் அலுவல்களையெல்லாம் தமிழிலே செய்ய உறுதிபூணல்வேண்டும். தமிழியக்க வாரத்தில் நாடெங்கும் தமிழியக்க விழாக்களை நடத்தித் தமிழ்மட்டும் சட்டத்தைப் பிரகடனஞ்செய்து அதன் நன்மைகளை விளக்கி எல்லோரையும் எல்லா அலுவல்களையும் தமிழிலே செய்விக்கவேண்டும்.

இலங்கையின் எல்லாப் பகுதிகளிலும் தமிழ் வாழவேண்டுமா? அரசாங்க அலுவலகங்கள்யாவற்றிலும் தமிழ் நிலைக்க வேண்டுமா? வங்கிகள் வியாபார நிலையங்கள் முதலியவற்றில் தமிழ்பொலியவேண்டுமா? தமிழ்ப் பேசும் மக்கள் இவற்றில் உத்தியோகம் பெறவேண்டுமா? இவற்றையெல்லாம்பெறுதற்கு நீங்கள் செய்யவேண்டியது ஒன்றே ஒன்று உண்ணும்போது உங்கள் உணவில் ஒரு பகுதியைப் பிறருக்குக் கொடுப்பது எவ்வளவு இலகுவானதோ அதைப்போல இலகுவானதும் யாவரும் செய்யத்தகுந்ததும் இது. செலவின்றி இடர்ப்பாடின்றிச் செய்யத்தக்கது. அதுதான் தமிழிலே எல்லா அலுவல்களையும் செய்வது. அடிமைப்படுத்தப்பட்டு ஒடுக்கப்பட்ட நாம், நம் மொழி உரிமையைக் காக்கவும் சிங்களத் திணிப்பைத் தடுக்கவும் செய்யத் தக்கது தமிழிலேயன்றி வேறெம் மொழியிலும் எந்த அலுவல்களையும் செய்ய மாட்டோம் என்று உறுதி பூணுவதே.

இந்த உறுதியை இலங்கை அரசாங்கத்திற்கும் உலக மக்களுக்கும் காட்டுவதற்குகந்த வழியாக ஏப்ரல் எட்டாம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு தமிழ்ப் பேசும் மக்கள் தங்கள் வீடுகள் ஒவ்வொன்றிலும் தமிழ்க்கொடியை ஏற்றவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறோம். "தமிழ் வாழ்க" என்னும் சொற்களை எழுதிய கொடியை எல்லோரும் ஏற்றுங்கள். எல்லாக் கொடியும் ஒருமாதிரி இருப்பதற்காக மஞ்சள் துணியில் நீல நிறத்தால் "தமிழ் வாழ்க" என்பதைப் பொறித்தல் நன்று.

# 'தமிழியக்க வார' நடவடிக்கைகள்

## சமஷ்டி எம். பி. க்களுக்கு எஸ். ஜே. வி. கடிதம்

யாழ்ப்பாணம், வெள்ளி

தமிழரசுக் கட்சியின் தமிழ் இயக்கவாரம் பற்றி தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும். செயற்குழு, மத்திய செயற்குழு, பொதுச் சபை, காரியசபை உறுப்பினர்களுக்கும் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தமிழ் இயக்கவார நடவடிக்கைகள் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். அவர் தமது கடிதத்தில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்:

எல்லாம் தமிழ் இயக்கவாரம் 8-ம் திகதி தொடங்கி 14-ம் திகதி வரை கொண்டாடப்படவிருக்கிறது. கிளிநொச்சியில் அண்மையில் கூடிய மத்திய செயற்குழு எதி வரும் 8-ம் திகதியிலிருந்து 14-ம் திகதி வரை தமிழியக்கம் நடத்த முடிவுசெய்தது. இம்முடிவை அமுல் நடத்துவதற்கு பின்வரும் திட்டத்தை நேரடி நடவடிக்கைக்குழு சிபார்சு செய்துள்ளது. இத்திட்டத்தின்படி ஒவ்வொரு தொகுதிக்கும் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினரும் அவர் இல்லாத தொகுதிகளில் கட்சியைச் சேர்ந்தவர்களும் பொறுப்பாளர்களாக இருப்பர்.

பொறுப்பாளர்கள் கிராமம்தோறும் தொண்டர்களைத் திரட்டி ஒவ்வொருகிராமத்தொண்டர்களுக்கும் பிரதிநிதியாக ஒருவரை நியமிக்கவேண்டும். எல்லாப் பிரதிநிதிகளும் சேர்ந்து தொகுதிக்குழுவாக அமைவர். தொகுதியில் நடவடிக்கைகளைச் செயல்படுத்துவதற்கும் ஏனைய காரியங்களும் மாவட்ட ரீதியில் (வவனியா, மன்னரைத் தவிர, இவ்விருதொகுதிகளும் தொகுதிக்குழுவே மாவட்ட குழுவாகச் செயல் படும்) ஏனைய மாவட்ட குழுக்கள் நடத்தும் குழுக்களில் தொகுதிப் பொறுப்பாளரும் தொகுதிக்குழுவிலிருந்து தெரிவு செய்ய 2 அல்லது 3 பிரதிநிதிகளும் அங்கம் வகிப்பர்.

இவ் வியக்கத்தை நடத்துவதற்கு உடனடியாகத் தொண்டர்களை ஊர்தோறும் திரட்டுவதிலும் தொகுதிக் குழுக்களை அமைப்பதிலும் மாவட்ட குழுவைக் கூட்டுவதிலும் உடனடியாகப் பணியாற்றவேண்டும்.

இதே நேரத்தில் கிளைகள் தேவையான இடங்களில் அமைக்கப்பட்டால் உதவியாக இருக்கும்.

தமிழியக்க வாரத்தில் தினமும் ஒவ்வொரு தொகுதியிலும் ஒவ்வோரிடத்தில் கட்சிப் பிரசாரக் கூட்டங்களுக்கு ஒழுங்கு செய்யவேண்டும். இவைஎல்லாவற்றையும் பொறுப்புடன் நடத்துவதற்கு பொறுப்பாளர்கள் ஒவ்வொருவரும் தமது தொகுதியில் முழுநேரமாக இம்மாதம் 1-ம் திகதியில் இருந்து கடமையாற்றுவது அவசியம்.

### ஐயாறன் எழுதுவது

திருக்கோணமலை கும்பாபிஷேக வைபவத்தில் சில விஷயங்கள் என் மனதைப் பெரிதும் கவர்ந்தன. சோர்ந்து நம்பிக்கை இழந்த தமிழ்ச் சமூகத்துக்குப் புதிய உற்சாகமும், புதிய நம்பிக்கையும் ஏற்பட்டுள்ளதை அங்கு கண்டேன். யாழ்ப்பாணம், கொழும்பு, மட்டக்களப்பு, மலைநாடு முதலிய பல பல இடங்களிலிருந்தும்ஆண்களும் பெண்களும் குழந்தைகளுமாக ஏராளமானவர்கள் கூட்டம்கூட்டமாக கோணேசப் பெருமானின் அருளைப் பெறவந்த ஆனந்தக்காட்சி, தமிழர்களிடையே புதிய ஒற்றுமை ஏற்பட்டு வருவதற்கு அத்தாட்சியாக இருந்தது. திக்கற்றவருக்கு தெய்வம்தானே துணை!

* * *

தமிழர் மட்டுமல்ல, சிங்களவர்களும் குடும்பம் குடும்பமாக அங்கு வந்து வழிபட்டனர். பல்வேறு சாதிசமயத்தைச் சேர்ந்தவர்களும் அங்கு வந்திருந்ததாக அறிந்தேன். எல்லாருக்கும் பொதுவான அன்புக்கடவுள்முன்பாக சாதி, சமயவேற்றுமைகளுக்கும் உயர்வுதாழ்வுகளுக்கும் இடமில்லை என்பதைக் கண்டேன். பணக்காரரும் பரம ஏழையும் ஒருங்கே நின்று வழிபட்டனர்.

கும்பாபிஷேகத்தில் வந்தவர்களுக்கெல்லாம் அன்னதானம் நடந்தது. அன்னதானம் முதலிய செலவுகளுக்காக யாரை அணுகினலும் அவர்கள் அதை ஒரு பெரிய பாக்கியமாகக் கருதி, உடன் தாராள மனதுடன் உதவினர்களாம். ஏராளமான நெல், காய்கறிகள், சாமான்கள், பணம் எல்லாம் தடையின்றிக் கிடைத்ததாக அன்பர் ராஜவரோதயம் நன்றியுடன் தெரிவித்தார்.

இளநீர் மலையைக் கண்டேன். மக்களின் தாகத்தைத் தீர்க்க அவை பெரிதும் உதவின.

* * *

கோவிலும், கலையும் கடலுடன் சூழ்ந்த அந்த கோணமாமலையிலே அன்று கண்ட காட்சிகளை என்னல் என்றும் மறக்கமுடியாது. யாகசாலைகள், ஹோமகுண்டங்கள், குருமார்கள் வேதகோஷங்கள்,தேவார கூட்டுப்பிரார்த்தனைகள் எல்லாம் திருக்கோணமலையை மீண்டும் தட்சிண கைலாசமாக்கின. திருக்கேதீச்சரத்திலிருந்து பாலாவி தீர்த்தத்துடனே வேதபாடசாலை மாணவர்கள் வந்து கலந்துகொண்டு பலரது நன்மதிப்பையும் பெற்றனர். அவர்கள் அங்கு வந்து செய்த வேத கோஷங்களைக் கேட்டதும், பல குருமார்கள் ஆச்சரியமடைந்து, தங்கள் பையன்களையும் அதில் சேர்க்க வேண்டுமென்று ஆவல் காட்டினராம்

என்றும் காணு அபூர்வ நிகழ்ச்சி ஒன்றை அங்கு கண்டேன். நயினை கைலாசநாதக் குருக்கள் பிரதம குருவாக இருந்து கும்பாபிஷேகமெல்லாம் முறைப்படி நடத்திவிட்டு, வெளியே சிவப்பொலிவுடன் வந்தபோது வயதில் முதிர்ந்தவர்கள் உள்ளிட்டு பல குருமார்களும் அவர்முன் சாஷ்டாங்கமாக விழுந்துவணங்கினர். இதைக் கண்டதும் பிரதமகுரு உணர்ச்சிமேலிட்டு அவரும் கீழே சாஷ்டாங்கமாக வணங்கினர். ஆனந்த பாஷ்பம் பெருக, குருமார்கள், ஈசுவரசந்நிதானத்தில் இப்படி பரஸ்பரம் வணங்கிய காட்சி,

(8-ம் பக்கம் பார்க்க)

# "உள்ளூராட்சி அதிகாரசபையும் அமைச்சும் ஒத்துழைப்புத் தரவில்லை சேவைசெய்யும் எண்ணத்துக்கு எத்தனையோ இடையூறுகள்"

## மேயர் பதவியை ராஜினுமாச்செய்த டாக்டர் தர்மலிங்கம் அறிக்கை

யாழ்ப்பாணம், வெள்ளி

**யாழ்ப்பாணம் மேயர் பதவியை நேற்று ராஜினுமா செய்த டாக்டர் எஸ். ஏ. தர்மலிங்கம் நீண்டதொரு அறிக்கையை விடுத்துள்ளார். ஸ்தலஸ்தாபன சேவை அதிகாரசபையின் அதிகாரங்கள் பற்றி டாக்டர் தர்மலிங்கம் தமது அறிக்கையில் குறை கூறியிருப்பதுடன் நகருக்குத் தாம் செய்ய முடிந்த சேவைகளையும் குறிப்பிட்டுள்ளார். தாம் சேவை செய்ய எண்ணிய பல திட்டங்களை நிறைவேற்ற முடியாதிருப்பதாகவும் நன்மைகளை முற்றுகச் செய்து முடிக்காமல் விலகவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவிக்கின்ருர்.**

29-5-62 தொடக்கம் நான் யாழ்ப்பாண மாநகர முதல்வராகக் கடமையாற்றினேன். இப்பொழுது நான் இப்பதவியில் என்னை ஏற்றியவர்களின் கோரிக்கைக்கிணங்க இப்பதவியை ராஜினுமாச்செய்கிறேன். இக்கட்டத்தில்நான் முதல்வராகக்கடமையாற்றியபோது என்னென்ன செய்ய எத்தனித்தேன், எதைச் சாதித்தேன், சில முயற்சிகளில் நான் ஏன் ஓரளவிலாவது சித்தியடையவில்லை யென்பன போன்ற விஷயங்களைப் பற்றி ஓர் அறிக்கை விடுவது எனது கடமையாகிறது.

1958-ம் ஆண்டில் நான் அரசியலை விட்டேன். இருந்தும் எனது நண்பர்களில் சிலர் மாநகரசபை அரசியல் துறையில் இறங்கும்படி ஒரு அளவிற்கு என்னை வற்புறுத்தினர், 17 மாதங்களாக மாநகரசபை அங்கத்தவராக இருந்த பின் மாநகரசபை முதல்வராகக் கடமையாற்றி மக்களுக்குப் பின் வரும் ரீதியில் சேவைகள் புரிந்து உதவி செய்யலாமென நினைத்தேன். முதலாவதாக நகரின் மின்சார விநியோகத்தை சீர்திருத்தலாம் என்று யோசித்தேன். இரண்டாவதாக மாநகரசபையின் நிதி பெருமளவில் விரயமாக்கப்படுவதை தடை செய்யலாமென நினைத்தேன். மூன்ருவதாக ஊழல்களுக்கும், நேர்மையற்றதனத்திற்கும் பெயர் பெற்ற எங்கள் சபையின் குறைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கலாமென்று யோசித்தேன்.

நான் சாதித்தவை அவ்வளவு பிரமாதமானவை அல்ல என்பதை நான் ஒப்புக்கொள்ள வேண்டும். அப்படி நான் செய்யாமலிருந்ததற்கு முக்கியமான சில காரணங்கள் உள. அவை வருமாறு: 1. சில அங்கத்தவர்களின் பொறுப்பற்ற ஓரவஞ்சமான மனப்பான்மை. 2. சில உத்தியோகத்தர்களின் ஓரவஞ்சமான தடை அலுவல்கள். 3. உள்ளூராட்சி அமைச்சினதும் உள்ளூராட்சி அதிகாரசபையினதும் பொறுப்பற்ற தன்மையை எல்லையாகக்கொண்ட தயவு தாட்சண்யமற்ற ஒத்துழையாமை.

### மின்சாரம்

தற்பொழுது பாவிப்பிலிருக்கும் மின் சக்தி மிகவும் குறைந்த உவோட்டளவில் தான் இருக்கிறது. சபை விநியோகம் செய்வதற்கு இது மிகவும் குறைந்த உவோட்டளவென்பதையும் கூறத்தான் வேண்டும். மின்மாற்றிகள் (டிரான்ஸ் போமர்கள்) போதிய அளவு ஏற்படுத்தாத காரணத்தாலும் அதிகரிக்கப்பட்ட மின்சுமையை ஏற்றுக்கொள்வதற்கு விநியோகத்திட்டங்கள் தேவையான முறையில் பலப்படுத்தப்படாத காரணத்தாலுமே உவோட்டளவு இவ்வித பயங்கரமாகக் குறைந்துள்ளது.

மின்சாரப்பகுதி முன்னுள் அதிபர் மின்சாரத்திட்டத்துடன் சம்பந்தப்படுவது தடை செய்யப்பட்ட பின் நான் சில அவசர சீர்திருத்தங்களைச் செய்ய முடிந்தது. எதுவித கோளாறுகளுமின்றி ஆஸ்பத்திரிக்கு மின்சாரம் விநியோகிக்கப்பட்டதையே நான் இங்கு குறிப்பிட முடியும். மனுக்களின் அவசியத்தையொட்டி இப்பொழுது வீட்டுத் தேவைக்கு மின்சாரம் கொடுக்க முடியும். நகரின் மின்சார தேவை 3000 உவாட்கள் ரீதியிலிருந்தாலும் பின்வரும் காரணங்களுக்காக நாம் 1700 உவாட்களே இப்பொழு எங்களால் விநியோகிக்க முடிகிறது.

(அ) மின்மாற்றிகள் (டிரான்ஸ்போமர்)போதியளவு இல்லாததால்.

(ஆ) நகரின் பகுதிகளின் விநியோகத்திட்டங்கள் (லைன்ஸ்) இல்லாத காரணத்தால்.

(இ) 1962 ஜூன்மாதத்திலும் இதற்கு முன்னரும் மின்சாரம் போதியளவு எடுக்கக்கூடிய போதிலும் சபையும், சபையின் உத்தியோகத்தர்களும் எடுக்காதது.

### சீரான மின்சார விநியோகத் திட்டம்

கொழும்புத்துறையிலும், யாழ்ப்பாணம் கான்வென்ட் மடத்தடியிலும் சோனகதெருவிலும், அரியாலையிலும் 4 மின் மாற்றிகள் (டிரான்ஸ் போமர்கள்) அமைப்பதற்கு ஆவன செய்துள்ளேன். இவ்வருடம் ஜூன் அல்லது ஜூலை மாதத்தில் இவைகள் யாவும் வேலை செய்ய ஆரம்பிக்கும் என்பதையும் இங்கு கூற விரும்புகிறேன். மின்விநியோகத் திட்டம் பற்றிய சிபார்சுகளுடன் ஓர் விபரமான அறிக்கை தயாரிப்பதற்கு அரசாங்க மின்சாரப் பகுதி இஞ்சினியரிடம் ஒழுங்கு செய்துள்ளேன், சித்திரை மாதத்திற்குள் இந்த அறிக்கை தயாராகுமென நான் அறிகிறேன். அத்துடன் இதனுல் மின்விநியோகத் திட்டங்களை சரியான வழியில் பலப்படுத்தவும், தற்போதைய குறைந்த உவோட்டளவையும் நிவர்த்தி செய்ய முடியுமெனவும் நான்நினைக்கிறேன்.

### விரயத்தைக் கட்டுப்படுத்தல்

நான் மாநகரசபை அங்கத்தவராகக் கடமையாற்றிய காலம் தொடங்கி சபையின் பல் துறைகளிலும் ஏற்பட்டு வந்த பல நஷ்டங்களையும் கவனித்து வந்தேன் இப்பேற்பட்ட விரயங்களை இல்லாமல் செய்து நிதிநிலைமையை சுமுகமாக்க முற்பட்டேன். ஆனுல் சில அங்கத்தவர்களின் பொறுப்பற்ற குணத்தாலும், சில உத்தியோகத்தர்களின் தடை அலுவல்களாலுமே நான் இவ்விஷயத்தில் துரிதமாக முன்னேற முடியாமலிருந்தது.

### ஊழல்கள், நேர்மையின்மை

நேர்மையற்றதனமும், ஊழல்களுமே யாழ்ப்பாண மாநகரசபை நிர்வாகத்தின் சாபக்கேடாக விருந்தது. ஒரு அளவில் வரியிறுப்பாளர்களும் ஓர் வழியில் இதற்குப் பொறுப்பாளவர்கள் என்பதைக் கூற விரும்புகிறேன். அடுத்த காரணமென்ன வென்ருல் உள்ளூராட்சிச் சேவை உத்தியோகத்தர்கள் மீது ஏற்படும் நியமனங்கள் இடமாற்றங்கள் காரணமாக எதுவித பொறுப்புணர்ச்சியுமின்றி உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபை அதிகார வேட்கை கொள்ளுவது தான். சில உத்தியோகத்தர்கள் இச்சபையில் நீண்டகாலமாக வேலை பார்த்து வருகிருர்கள். இவர்கள் பொறுப்புள்ள சில பதவிகளைச் சேகரித்துக்கொண்டு, நேர்மையற்ற வழிகளையும் பின்பற்றுகிருர்கள். ஒரு உத்தியோகத்தரையும் குறிப்பிட்ட ஒரு பதவியில் மூன்று வருட காலத்திற்கு மேல் இருக்கவிடாமலிருந்தால், இதர உள்ளூராட்சி மன்றங்களுக்கு இவ்வுத்தியோகத்தர்களை இடமாற்றம் செய்யும் முறையிருந்தால் இந்நிலையைத் தவிர்க்கமுடியும்.

உள்ளூராட்சி அதிகாரசபை சில உண்மை உத்தியோகத்தர்களை கண்மூடித் தனமாக வேறு இடங்களுக்கு இடமாற்றம் செய்து, உள்ளலுவலகத்தில் காசு களஞ்சுகளை நேர்மையற்ற வழிகளில் சுலபமாக பெற்றுக்கொள்ளக்கூடிய பகுதிகளிலிருந்து உள்ளலுவலகத்தின் இதர பகுதிகளுக்கு வேலை மாற்றம் பெறவிரும்பாத சில உத்தியோகத்தர்களை இங்கேயே வைத்திருக்கிறது. இந்த உத்தியோகத்தர்களுக்கு கடமையுணர்ச்சியென்பதே கிடையாது. உள்ளூராட்சிச் சபையில் செல்வாக்குள்ள இதர சில வெளி அரசியல் வாதிகளைத் திருப்திப்படுத்து முகமாக இவர்கள் ஓரவஞ்சமாக நடந்து வருகிருர்கள். இந்த உத்தியோகத்தர்கள் அவசர விண்ணப்பங்களை தடைப்படுத்த முயல்வது மட்டுமல்லாமல் சில வெளி அரசியல் வாதிகளின் விருப்பத்திற்கிணங்கவே நடக்கிருர்கள்.

எதிர்ப்பு இருந்ததும் நான் சில உள்ளக மாற்றங்கள் செய்துள்ளேன். இம்மாற்றங்கள் ஊழல்களை இனிமேல் குறைக்குமென நம்புகிறேன். எந்த உத்தியோகத்தரும் குறிப்பிட்ட அரசியல் கோட்பாடுகளுக்கு இணங்காமல், சபைக்கு நேர்மையாகப் பணி புரியவேண்டும். பாரபட்சமற்ற முறையில் இன, மத, சாதி, கட்சி வேற்றுமை பாராட்டாமல் இவர்கள் கடமையாற்றுவதே இவர்கள் செய்யும் பெரும் பணியாகும்.

### உள்ளூராட்சிசேவை அதிகாரசபை

மாநகர முதல்வர் என்ற உள்ளூராட்சி சேவை அதிகாரசபைக்கும் எனக்குமிடையே ஏற்பட்ட சில கஷ்டங்களை நான் முன்பு குறிப்பிட்டுள்ளேன். உள்ளூராட்சிச்சேவை அதிகாரசபைக்கு பொறுப்பற்ற அதிகாரமிருக்கிறது சபையின் தீர்மானங்களுக்கு முரணுகவும் உயர்தர உத்தியோகத்தர்களின் சிபார்சுகளுக்கு செவிசாய்க்காமலும் நடந்து வருவதாலும் பலபாரதூரமான விளைவுகள் ஏற்பட்டு இன்னல்களை உண்டாக்கியுள்ளது. உத்தியோகத்தர்களின் இடமாற்றம் சம்பந்தமாக பாரபட்சமாக இச்சபை நடந்து வந்து மாற்ருந்தாய் மனப்பான்மையை யாழ்ப்பாண மாநகரசபைக்குக்காட்டி வந்துள்ளது.

### வேலை நிறுத்தம் நடத்த காரணம்

சிலரால் உருவாக்கப்பட்ட நகர சுத்தித் தொழிலாளரின் வேலை நிறுத்தம் சபையைக் கலைத்து எனது நிர்வாகத்தினைச் சீர்குலைப்பதற்காகவே மேற்கொள்ளப்பட்டது. அமைச்சு திடீர் நடவடிக்கையெடுத்து ஓர் உயர்தர உத்தியோகத்தரை காரணமோ, விசாரணைத் திகதியோ குறிப்பிடாது விசாரணை நடத்த அனுப்பியிருந்தது. தகுந்த காரணமின்றி வேண்டுமென்றே விசாரணைத் திகதி முன்போடப்பட்டது. ஆனுல் இந்த உயர்தர உத்தியோகத்தர் நேர்மையான முறையில் உள்ளதை உள்ளபடி விசாரித்து விசாரணையை முடித்தபடியாலேயே அமைச்சர் அவர்களால் சபையைக் கலைக்க முடியாது போயிற்று. உள்ளூராட்சி அமைச்சரவர்கள் ஒரு புதிய வட்டாரத்தை ஏற்படுத்தியிருக்கிருர். இந்த வட்டார நிர்ணயத்திற்கு எதுவித காரணமுமே கிடையாது. பரப்பளவு, சனத்தொகை விகிதம், சிறுபான்மை மக்களின் பிரதிநிதித்துவத்துக்கு இம்முறை முரணுகவுள்ளது. இதர எல்லா வட்டாரங்களும் கூடிய சனத்தொகையைக் கொண்டவை. சபை தீர்மானித்தபடி நடந்திருந்தால் இதுவரை பிரதிநிதித்துவம் பெருத சில சமுகங்களுக்கும் இடமளிக்கலாம். 1962-ம ஆண்டு நவம்பர் மாதத்திற்குமுன் நகரை 21 வட்டாரங்களாக பிரிக்கும்படி உள்ளூராட்சி அமைச்சரவர்கள் [sic: அணையாளரை] வேண்டியுள்ளது. அப்பொழுது எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஒரு உயர்தர அதிகாரியை நிலைமையைப் பரிசீலனை செய்ய யாழ்நகருக்கு அனுப்பிவைத்தார். மந்திரியவர்கள் தனது அதிகாரங்களை இவ்விஷயத்தில் துர்ப்பிரயோகம் செய்துள்ளார் என்பது புலனுகின்றது.

இந்த உயர்தர அதிகாரியின் அறிக்கை வெளியானுல் மந்திரியின் கண்மூடித்தனமான செயல் புலனுகும். மந்திரியவர்கள் சகல சமூகங்கள் மீதும் அநீதியை விளைவித்துள்ளார். உதாரணமாக (1) தாழ்த்தப்பட்ட சமூகம், (2) விஸ்வகர்ம சமூகம், (3) அரியாலை வடக்கு மக்கள், (4) கல்வியங்காட்டு மக்கள், (5) அரியாலை மக்கள், (6) சிங்கள மக்கள் ஆகியோருக்கு பெரும் அநீதி விளைவிக்கப்பட்டுள்ளது. சபை பிரஸ்தாபித்தது போல் வட்டாரங்கள் பிரிக்கப்பட்டிருந்தால் இந்த அவலநிலை ஏற்பட்டிருக்காது.

போக்குவரத்து:- பல வீதிகள் ஒடுக்கமாகவிருப்பதால் போக்குவரத்துக்கும் இடையூறுகவிருக்கின்றது. "ஒரு வழிப் பாதை" முறை இப்பொழுது நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றது.

சந்தை:- புதிய சந்தையொன்று வெகு விரைவில் அமைக்கப்பட வேண்டும். பசாரில் மாநகர சபைக்குச் சொந்தமான 6-8 ஏக்கர் காணியிருக்கிறது. இந்த இடம் நல்ல மாதிரி பிரயோகிக்கப்பட்டால் அரைக்கோடி ரூபா வருமானமாக மாநகரசபைக்குச் சேரும். நகர நிர்மாண சிற்பியின் ஒத்தாசையுடன் இதனைச் செய்து முடிக்கலாம். இதற்கிடையில் நகரிலுள்ள தகரக் கடைகள் யாவற்றையும் ஒழிக்க வேண்டும். பசாருக்கு ஓர் மத்திய வீதி அவசியமாகின்றது. வாகனங்கள் மறித்துவைக்கக்கூடிய வீதிகளும் அவசியமே.

வீதிகள்:- வீதிகள் ஒடுக்கமாகவிருப்பதால் இவைகள் யாவற்றையும் விஸ்தரிக்க வேண்டும். கல்லுப்போட்டு பதனிட்டு இவைகள் திருத்தப்படவேண்டும்.

வடிகால்கள்:- வடிகால் தண்ணீரை அகற்றவே யொழிய பணத்தை விரயமாக்கும் நோக்கத்துடன் அமைக்கப்படக்கூடாது. ஒரே திட்டத்தின் கீழ் வடிகால்திட்டம் இயங்க வேண்டும்.

### வீடமைப்பு திட்டம்

வீதிகளுக்குச் சொந்தமான காணிகளை அபகரிப்பதும், சட்ட விரோதமான முறைகளில் வீடுகளைக் கட்டுவதும் சாதாரணமாக நடைமுறையிலுள்ள இவை உடனடியாக நிறுத்தப்படவேண்டும். நான் முதல்வராக விருந்தபோது 1100 கட்டிட விண்ணப்பங்களுக்கு ஆவன செய்யப்பட்டன மாநகரசபை உத்தியோகத்தர்களுக்கு வீடுகள் கொடுப்பதற்கு ஓர் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. நகரசுத்தித் தொழிலாளர்க்கு வீடுகள் அமைப்பதற்காக கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன. மின்சார விண்ணப்பப் பத்திரங்கள், கட்டிட விண்ணப்பப் பத்திரங்கள் மூலம் முன்னர் ஏற்பட்ட தாமதங்கள் இப்பொழுது குறைக்கப்பட்டுள்ளது. சில வாரங்களிலேயே இவ் வேலைகளில் ஊழல் ஏற்படாதவண்ணம் இப்போது கண்காணிக்கப்பட்டுவருகிறது.

நகரசுத்தி:- மலம் அப்புறப்படுத்தப்படும் பழையமுறையைக் கைவிட்டு நீர் வீச்சு, "செப்டிக்டாங்" முறை புகுத்தப்படல் வேண்டும்.

பஸ் நிலையம்: பஸ் நிலையம் வேறு இடத்திற்கு மாற்றப்படல் வேண்டும். பசாருக்கு அருகாமையில் இது இருக்கவேண்டும். போதிய இடமும் இதற்காக வழங்கப்படவேண்டும்.

நகரசுத்தித்தொழிலாளருக்கு காணி வாங்குதல், நிர்வாகக் கட்டடம், பஸ் நிலையம் ஆகியவைகளை விஸ்தரிக்க விரைவில் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

பாஷையூரில் காணியெடுத்துக் குடியேற்றம்: குருநகருக்கும் பாஷையூருக்கு மிடையேயிருக்கும் தரை நிலத்தில் ரூபா 20,000-00 செலவில் இதைச் செய்யமுடியும். இதைப் பின் கடலோர மக்களுக்குக் குத்தகைக்குக்கொடுக்கலாம். பெரிய கடையிலுள்ள குளத்தை மூடி பசார் விஸ்தரிப்புச் செய்யப்பட வேண்டும்.

மின்சாரம்: 4000கில்லோ வாட்டில் ஓர் மின்மாற்றி நகரின் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்காக அமைக்கப்படவேண்டும். விநியோகத்திட்டமும் பலப்படுத்தப்பட வேண்டும். வீதிவெளிச்ச முறையும் திறமையாகக் கையாளப்படவேண்டும்.

அங்கத்தவர்கள்: அங்கத்தவர்கள் நாளாந்த நிர்வாகத்தில் தலையிடக்கூடாது சபையின் ஊழியர்கள் செய்ய வேண்டிய கடமைகளை இவர்

(8-ம் பக்கம் பார்க்க)

## மாணவர்மன்ற பொதுக்கூட்டம்

வவனியா, வியாழன்

வவனியா பூந்தோட்டம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர் மன்றப் பொதுக்கூட்டம் தலைவர் செல்வன் ஆ. ஆனந்தராசா தலைமையில் நடைபெற்றது.

மன்றப் போஷகரான தலைமையாசிரியர் திரு. நீ. அந்தோனிப்பிள்ளை பேசும் பொழுது, மன்றப் பெயரளவில் இராமல் செயலிலும் திறம்பட சேவை செய்து வவனியாப்பகுதியிலே ஒரு முன்னோடியாக ஆறங்க மாணவர் தன் சாதி, சமய வேறுபாடு இன்றி கருமம் ஆற்றவேண்டுமெனவும் மாணவர்கள் கடைப்பிடிக்கவேண்டிய ஒழுங்குகள் பற்றியும் எடுத்துக் கூறினர்.

## பாடசாலைகளில் இடவசதியின்மை

கொழும்பு, வியாழன்

அடுத்த தவணை ஆரம்பமாகும் பொழுது நாட்டிலுள்ள பாடசாலைகளில் 10,000 மாணவர்கள் எச். எஸ். சி. கலை வகுப்பிற்கு அனுமதி பெறுவதற்கு தகுதியுடைவர்களாவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆனல் 2,000 மாணவர்களுக்கு மட்டுமே எச். எஸ். சி. கலை வகுப்பில் அனுமதியளிக்கக்கூடிய வசதி இருக்கின்றது. கல்வி இலாகா மேற்கண்ட மதிப்பீட்டின் மூலம், எச். எஸ். சி. வகுப்பில் ஆசிரியராகப் பணி புரிவதற்கு 375 பட்டதாரி ஆசிரியர்கள் தேவைப்படுவார்கள் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

## சுதந்திரக்கட்சி மகாநாடு ஒத்திவைப்பு

கொழும்பு, புதன்

மே மாதம் 4-ந் திகதி ஆரம்பமாகவிருந்த ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் வருடாந்த மகாநாடு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. முஸ்லிம்களின் ஹஜ்ஜுப் பெருநாளை முன்னிட்டே மகாநாடு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் மகாநாடு ஜூன் மாதம் முதலாம் திகதி நடைபெறும்.

## 'யங்லயன்ஸ்' கோஷ்டி வெற்றி

யாழ்ப்பாணம், வியாழன்

அரியாலை விளையாட்டுக் கழகத்தினர் தமது 44-வது வருடாந்த விழாவை முன்னிட்டு பல கழகங்களுக்கிடையில் நடாத்தி வரும் 'நொக்கவுட்' போட்டியில் யாழ்ப்பாணம் 'யங்லயன்ஸ்' கோஷ்டியினர் கிரிக்கெட் போட்டியிலும், உதை பந்தாட்டப் போட்டியிலும் பெரும் வெற்றியீட்டியுள்ளனர்.

கிரிக்கெட் போட்டியில் 'யங்லயன்ஸ்' கோஷ்டியுடன் 'ஓல்றவுண்டஸ்' கோஷ்டியினர் போட்டியிட்டனர். யங்லயன்ஸ் கோஷ்டியினர் தமது முதலாவது ஆட்டத்தில் 9 விக்கட்டுகள் நஷ்டத்துக்கு 98 ஓட்டங்களை எடுத்தனர். ஓல்றவுண்டஸ் கோஷ்டியினர் தமது இரு ஆட்டங்களிலும் முறையே 30, 28 ஓட்டங்களைப் பெற்றனர். யங்லயன்ஸ் கோஷ்டியினர் இன்னிங்சாலும் 40 ஓட்டங்களாலும் ஓல்றவுண்டஸ் கோஷ்டியினரை தோற்கடித்தனர். யங்லயன்ஸ் கோஷ்டிக்கு செல்வன் அன்ரனி தலைமைதாங்கினர்.

உதைபந்தாட்டப் போட்டியில் 'யங்லயன்ஸ்' கோஷ்டியுடன், 'ருறஸ்ட்' கோஷ்டியினர் போட்டியிட்டனர். இப்போட்டியில் யங்லயன்ஸ் கோஷ்டியினர் 2—1 கோல்களால் ருறஸ்ட் கோஷ்டியினரை தோற்கடித்தனர். இரு கோல்களையும் செல்வன் பத்மலிங்கம் அடித்தார். யங்லயன்ஸ் கோஷ்டிக்கு செல்வன் தேவராசா தலைமை தாங்கினர்.

## திருத்த மசோதா தயாராகிறது

கொழும்பு, வியாழன்

அரசாங்க வைத்திய இலாகாவில் அப்போதிகரிகளாகக் கடமையாற்றுபவர்களுக்கு நன்மையளிக்கும் திருத்த மசோதா ஒன்று தயாரிக்கும் வேலை நடைபெற்று வருகிறது. இவ்வேலையைத் தொடர்ந்து செய்யுமாறு சுகாதார மந்திரி இலாக அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார். புதிதாக தயாரிக்கப்படும் திருத்த மசோதா மூலம் 20 வருடம் அப்போதக்கரிளாகப் சுகாதார இலாகாவில் பணியாற்றியவர்களாகவும், அந்த 20 வருடங்களிலும் பத்து வருடங்களை சுகாதார நிலையங்களில் பொறுப்பதிகாரியாகளாக கடமையாற்றியவர்களும் வைத்தியர்களாக பரீட்சிப்பதற்கு பதிவு செய்யப்படுவார்கள்.

## சைக்கிள் வீரருக்கு வரவேற்பு

பருத்தித்துறை, புதன்

கரையோரமாக இலங்கைச் சுற்றுப்பிரயாணத்தை கடந்த மாதம் 23-ந்தேதியன்று காலை மேற்கொண்ட ஆத்தியடி விளையாட்டுக்கழக வீரர் திரு. கே. ரி. இராசசிங்கம் திங்களன்று மாலை இங்கு வந்துசேர்ந்தார்.

தமது சுற்றுப்பிரயாணத்தை வெற்றிகரமாக முடித்த வீரரை நண்பர்களும், விளையாட்டுக்கழகத்தினரும் மலர் மாலைகள் சூட்டி வரவேற்றுக் கௌரவித்தனர்.

கட்டைவேலி ஞானசாரியர் கல்லூரியிலும், ஆத்தியடியிலும் அவருக்கு வரவேற்புக்கள் நடைபெற்றன.

## கி. பாகிஸ்தானில் ஹிந்துக்கள் கஷ்டம்

புதுடில்லி, ஏப்ரல் 3

கிழக்கு பாகிஸ்தானில் சிறுபான்மையினர் தொல்லைப் படுத்தப்படுவதாக கடந்த 2 மாதங்களாகத் தகவல் கிடைத்திருப்பதாய் லோக சபையில் அறிவிக்கப்பட்டது. அஸ்ஸாமுக்குள் சட்டவிரோதமாக வந்த பாகிஸ்தானியர் திருப்பியனுப்பப்பட்டதைத் தொடர்ந்து, கிழக்குப் பாகிஸ்தானிலுள்ள ஹிந்துக்கள் நிர்ப்பந்தத்திற்காளாகியிருப்பதாய் அறிவிக்கப்பட்டது.

## காணிச் சபையின் சிபார்சுகள்

### பரிசீலனை செய்ய குழு நியமனம்

கொழும்பு, வியாழன்

1956-ம் வருடத்தில் காணிச் சபை வெளியிட்ட 48 சிபார்சுகளையும் பரிசீலனைசெய்வதற்கு குழு ஒன்றை கைத்தொழில் மந்திரி திரு. மைத்திரிபால சேனநாயகா விரைவில் நியமிக்கவிருக்கிறர்.

இதற்கு அதிகசெலவு ஏற்படும் என கைத்தொழில் உள்நாட்டு கலாசாரமந்திரி தெரிவித்துள்ளார்.

## சீன பிரசார வெளியீடுகள் அழிக்கப்படும்

புதுடில்லி, ஏப். 3

இந்தியாவுக்கு வரும் சீன எதிர்ப்பிரசார வெளியீடுகளைத் தடுக்க சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருப்பதாக உள்நாட்டுமந்திரி திரு. சாஸ்திரி கூறினர். இன்னும் சில வெளியீடுகள் வந்துகொண்டிருப்பதாயும், இவைகளைக் கைப்பற்றி அழிக்குமாறு சுங்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருப்பதாயும் திரு. சாஸ்திரி மேலும் கூறினர்.

## சீனர்கள் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்

கொழும்பு, வியாழன்

கள்ளக்கடத்தலில் ஈடுபட்டதாகக் குற்றம்சாட்டி ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ள இரு சீனர்களையும் சுங்க இலாகா பிரதம கலெக்டர் விசாரணை ஒன்றிற்கு அழைத்துள்ளார். நேற்று கொழும்பு, கோட்டை கூட்டு மாஜிஸ்டிரேட்டிடம் இப்படி அவர்களை விசாரணைக்கு அழைப்பது முறையற்றது என சீனர்கள் சார்பில் ஆஜரான வழக்கறிஞர்கள் தெரிவித்தனர். அத்துடன் விசாரணை செய்யப்படாமலிருப்பதற்கான பாதுகாப்பை அளிக்கவேண்டுமெனவும் கோர்ட்டைக் கேட்டுக்கொண்டனர். ஆனல் மாஜிஸ்டிரேட் தன்னல் விசாரணையைத் தடைசெய்வதற்கு உத்தரவு பிறப்பிக்க முடியாதென்றும் ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ளவர்கள் விரும்பினல் விசாரணைக்குச் செல்லலாம் அல்லது செல்லாமலிருக்கலாம் எனவும் தெரிவித்தார்.

லொய்லோக்சின், ஞேபோர்டோ வூ என்ற இரு சீனர்களும் நாட்டிலிருந்து விலையுயர்ந்த கற்களையும், வெளிநாட்டு 'செக்'குகளையும் செல்லுபடியாகாத பாஸ்போர்ட் வைத்திருந்து கடத்தினர்கள் எனச்சந்தேகிக்கப்பட்டுரிமாண்டில் வைக்கப்பட்டனர். வெளிநாட்டிலிருந்து சில தகவல்கள் வந்துசேராததால் அவர்கள் மீது இன்னும் குற்றம் சாட்டப்படவில்லை.

## வழக்குத் தொடர முடிவு

கொழும்பு, வியாழன்

இறக்குமதிக் கட்டுப்பாட்டு இலாகாவிற்கு துணிவகைகளின் இறக்குமதிசம்பந்தமாக பொய்யான விபரங்கள் கொடுப்பவர்களை கண்டுபிடித்து அவர்கள் மீது வழக்குத்தொடருவதென தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இறக்குமதிக் கட்டுப்பாட்டு இலாகா கட்டுப்பாட்டதிகாரி திரு. சி. மயில்வாகனம் தெரிவித்துள்ளார்.

வர்த்தக அமைச்சின் பார்லிமெண்டரி ஆலோசனைக்குழுவின் விசேட கூட்டத்தில் திரு. மயில்வாகனம் இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

## பீடை தாக்குதல்

கொழும்பு, வியாழன்

நெற்பயிர்களில் உண்டாகும் பீடை தாக்குதலால் வருடமொன்றுக்கு 135,000,000 ரூபா நஷ்டமேற்படுவதாக நெற்பயிர்களில் 'பீடையின் தாக்குதல்' என்றஅறிக்கையில் டாக்டர் எச். ஈ. பெர்ணண்டோ தெரிவித்துள்ளார். இவ்வாறு பீடை தாக்குதல் ஏற்படுவதால் பாவிப்பாளர்களுக்கு 11,250,000 புசல் நெல் நஷ்டமேற்படுகின்றது. பசளைகளைப் பாவிப்பதால் இந்த நோய் பெருமளவில் அதிகரிக்கலாம் எனவும் திரு. பெர்ணண்டோ தெரிவித்துள்ளார்.

## தாதிமார் ஆட்சேபம்

வார்சா, ஏப்ரல் 4

போலந்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான தாதிமார்கள் சுகாதாரஅமைச்சிடம் சென்று தமக்கு வழங்கப்பட்டுவரும் குறைந்த சம்பளம் பற்றி ஆட்சேபம் தெரிவித்தார்கள்.

அவர்கள் தமது மோசமான குடியிருப்பு வசதிகள் பற்றியும் குறைதெரிவித்தார்கள்.

போலந்தில் மிககுறைவான சம்பளத்தைப் பெறுபவர்கள் தாதிமார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## பல்கேரியாவில் நாஸ்திக சங்கங்கள்

பெல்கிரேட், ஏப். 4

பல்கேரியாவில் சமய நம்பிக்கையை மக்களிடையே இருந்து நீக்கிவிட நாஸ்திக சங்கங்கள் தீவிரமாக முயன்று வருகின்றன.

பல்கேரிய கம்யூனிஸட் கட்சியின் பத்திரிகை ஒன்று இவ்வித பிரசாரத்தில் முழு முயற்சியுடன் ஈடுபட்டு மக்களை மூடப்பழக்கங்களிலிருந்து விடுவிக்கத்தக்க வழி வகைகளைக் கையளுமாறு இந்தச் சங்கங்களைக் கேட்டுள்ளது.

இவ்வித செயல்களில் ஈடுபட விஞ்ஞான நாஸ்திகர்கள் முன்வர வேண்டுமென்றும் மேற்படி பத்திரிகையில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

## வீடு வாடகை|விற்பனை, காணி குத்தகை|விற்பனை, பொருள்கள் வாங்க|விற்க இலகுவான வழி.

### ஈழநாடு சிறு விளம்பர விகிதங்கள்

#### விளம்பரப் பிரிவுகள்

**பிரிவு 1.**
பிறப்பு, இறப்பு, திருமணம், அழைப்பிதழ், வாழ்த்து, அனுதாப விளம்பரம், தனிப்பட்டவிஷயம், பொருள்களைக் காணவில்லை, பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டன முதலியன.

பி. கு. திருமண விளம்பரமாயின், மணமக்களது கையொப்பமும், இறப்பு விளம்பரமாயின் இறந்தவரது உரிமையாளரின் கையொப்பமும் தேவை.

**பிரிவு 2.**
வேலை தேவை, வேலை காலி, விளையாட்டு வகுப்புகள், டியூசன், வர்த்தக வகுப்புகள், நடன வகுப்புகள், புத்தகங்கள், சாஸ்திரம் முதலியன.

**பிரிவு 3.**
வீடு வாடகைக்கு, விற்பனைக்கு, காணி குத்தகைக்கு, விற்பனைக்கு, வீடும் சொத்தும், தங்குமிடவசதி, தோட்டம் முதலியன.

**பிரிவு 4.**
தாவர உற்பத்திகள், தெங்குப் பொருள்கள், கோழிப் பண்ணை, கால்நடை, செடிகள், விதைகள், உரம் முதலியன.

**பிரிவு 5.**
சைக்கிள், மோட்டார் சைககிள், வானெலிப்பெட்டி, கடிகாரம், தையல் இயந்திரங்கள், மோட்டார் வாகனங்கள், மோட்டார் உறுப்புகள், கார்கள், லொறிகள், புகைப்படச் சாதனங்கள், தட்டெழுத்துப் பொறிகள், அலுவலக உபகரணங்கள், எஸ்டேட் சப்ளைஸ், தண்ணீர் இறைக்கும் இயந்திரங்கள். டிராக்டர்கள், றெயிலர்கள், கட்டிடச் சாமான்கள் முதலியன.

**பிரிவு 6.**
வைத்தியம், மருந்துகளும் மூலிகைகளும், மருத்துவம் முதலியன.

**பிரிவு 7.**
வர்த்தக அறிவித்தல்கள், மனைவசதி, ஈட்டுக்குப் பணம், வியாபார ஸ்தலங்கள் முதலியன.

**பிரிவு 8.**
ஆபரணங்கள், இசைக்கருவிகள், அழகுக்கலை முதலியன.

ரூ 50க்குக் குறைந்த பெறுமதியான பொருள்களின் விளம்பரங்களாயின், முதல் 10 சொற்களுக்கும், ரூ. 2-00 விதமும் அதற்குக் கூடுதலான ஒவ்வொரு சொற்களுக்கும், 10 விதமும் அறவிடப்படும்.

விளம்பரத்தில் குறிப்பிடப்படாத விளம்பரதாரர்களின் பெயர்கள் எக்காரணம் கொண்டும் எம்மால் அறிவிக்கப்பட மாட்டாது.

'ஈழநாடு' மேற்பார்வையில் அமையும் விளம்பரங்களுக்கு நூற்றுக்கு 50 வீதம் வேருக அறவிடப்படும்.

தபால் பெட்டி எண் குறிப்பிட்ட விளம்பரங்களாயின் மேலதிகமாக 5 சொற்கள் கூட்டி எண்ணப்படும்.

| சொற்கள் | ஒருமுறை பிரசுரிக்க. | 3ம் முறைக்கு மேற்பட்ட பிரசுரங்களுக்கு. விதம் |
|---|---|---|
| 15 | ரூ. 3-50 | ரூ. 3-00 |
| 16 | 3-60 | 3-10 |
| 17 | 3-70 | 3-20 |
| 18 | 3-80 | 3-30 |
| 19 | 3-90 | 3-40 |
| 20 | 4-00 | 3-50 |
| 21 | 4-10 | 3-60 |
| 22 | 4-20 | 3-70 |
| 23 | 4-30 | 3-80 |
| 24 | 4-40 | 3-90 |
| 25 | 4-50 | 4-00 |
| 26 | 4-60 | 4-10 |
| 27 | 4-70 | 4-20 |
| 28 | 4-80 | 4-30 |
| 29 | 4-90 | 4-40 |
| 30 | 5-00 | 4-50 |
| 31 | 5-10 | 4-60 |
| 32 | 5-20 | 4-70 |
| 33 | 5-30 | 4-80 |
| 34 | 5-40 | 4 90 |
| 35 | 5-50 | 5-00 |
| 36 | 5-60 | 5-10 |
| 37 | 5-70 | 5-20 |
| 38 | 5-80 | 5-90 |
| 39 | 5-90 | 5-40 |
| 40 | 0-60 | 5-50 |

40க்கு மேற்பட்ட ஒவ்வொரு சொல்லுக்கும் சதம் 15.

# வடபகுதி கல்லூரிகளின் கிரிக்கெட் போட்டி

## ஓரே பார்வையில் ஏழு கல்லூரிகள் நிலை

—விக்டர் எஸ். கிருபராஜ்—

**வடபகுதி கல்லூரிகளின் கிரிக்கெட் போட்டிகள் முடிவுறும் கட்டத்தை அடைந்து கொண்டிருக்கின்றன. இந்த நேரத்தில் இந்த வருடத்தில் இடம்பெற்ற போட்டி களைப்பற்றி அலசிப் பார்ப்பது நிலையை அறிய உதவுவதாக இருப்பதோடு எவ்வளவு தூரம் முன்னேற்றமடைய வேண்டியிருக்கிறது என்பதையும் நம க்கு எடுத்துக்காட்டுவதாக இருக்குமல்லவா.**

இந்த ஸீஸனில் விளையாடிய கல்லூரிகளில் குறிப்பிடும்படி யாக விளையாடியவர்கள் ஹாட் லிக்கல்லூரியைச் சேர்ந்தவர் கள்தான் எனக் கூறலாம்.

ஹாட்லிக் கல்லூரிக் கோஷ் டியினர் சென். ஜோன்ஸ் கல் லூரியுடனும் மத்திய கல்லூரி யுடனும் போட்டியிட்டபோது மத்திய கல்லூரியை வென் றது. ஆனால் சென். ஜோன்ஸுடன் போட்டியிட்ட போது தோல்விகண்டது. சென். ஜோன்ஸ் மத்தியகல் லூரியுடன் போட்டியிட்ட போது வெற்றிதோல்வியின்றி போட்டி முடிவுற்றது.

சென். பட்ரிக்ஸுடன் போட்டியிட்டபோது சென். ஜோன்ஸ் கல்லூரியும் மத்திய கல்லூரியும் தோல்வி கண்டன.

சென். பட்ரிக்ஸைத் தோற்கடித்த யாழ்ப்பாணக் கல்லூரியுடன் போட்டியிட்ட போது மத்தியகல்லூரியின ரும் சென். ஜோன்ஸ்கல்லூரி யினரும் யாழ்ப்பாணக் கல்லூ ரியைத் தோற்கடித்தனர்.

ஸ்கந்தவரோதயாக் கல்லூரி யாழ். இந்துக் கல்லூரியைத் தோற்கடித்தது. சில தோல்வி களை ஏற்க வேண்டிவந்தாலும் ஸ்கந்தவரோதயா இந்த ஸீஸ னில் சிறிது திறமை காட்டி னார்கள் என்றே கூற வேண் டும்.

நடைபெற்ற விளையாட்டுக் களில் சென். ஜோன்ஸ் முன் னணியில் நிற்கிறது. ஹாட்லி, மத்தியகல்லூரி, யாழ்ப்பாண ணக்கல்லூரி ஆகியவை நல்ல முயற்சிகள் செய்துள்ளன.

### வீரர்கள் வரிசை

துடுப்பெடுத்தாடியதில் சென். ஜோன்ஸைச் சேர்ந்த தெய்வேந்திரா தமது திறமை யான விளையாட்டால் நல்ல தொரு வீரர்கள் வரிசையில் இடத்தைத் தேடியுள்ளார். ஹாட்லிக் கல்லூரியைச் சேர் ந்த பாலசிங்கம், ராஜலிங்கம், சென். ஜோன்ஸைச் சேர்ந்த தம்பிராஜா, கனகதுரை, யாழ்ப்பாணக் கல்லூரியைச் சேர்ந்த தவராஜா ஆகியோ ரும் நன்கு விளையாடினார்கள்.

கனகதுரை பந்தெறிவதில் திறமைபெற்றவராக இருந்த போதிலும் துடுப்பெடுத்தா டியபோதும் தமக்கு அதிலும் திறமை இருக்கிறது என்ப தைக் காட்டினார்.

பந்தெறிவதில் சென்ஜோன் ஸைச் சேர்ந்த செல்வதுரை யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி யைச் சேர்ந்த மகா லிங்கம்,சென்.பட்ரிக்ஸைச் சேர் ந்த தெய்வேந்திரன் ஆகி யோர் திறமைகாட்டினர். இதில் தெய்வேந்திரன் முன் னணியில் நிற்கிறார். ஸ்கந்தவ ரோதயக் கல்லூரியைச் சேர் ந்த ருத்திரன், இந்திரன் மகாஜனக் கல்லூரியைச் சேர் ந்த மகேந்திரன், செ.ன்பட் ரிக்ஸைச் சேர்ந்த ஜெயசிங் கம், ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த பாலசிங்கம் மத்திய கல்லூரியைச் சேர்ந்த டொனு ல்ட்,சென். ஜோன்ஸைச் சேர் ந்த கனகதுரை ஆகியோரும் குறிப்பிடத்தக்க வகையில் விக் கட்டுகளை வீழ்த்தினர்.

ஹாட்லியைச் சேர்ந்த பால சிங்கம் சென்.ஜோன்ஸைச் சேர்ந்த தெய்வேந்திரா கனக துரை, மத்திய கல்லூரியைச் சேர்ந்த மகாலிங்கம் யாழ்ப் பாணக்கல்லூரியைச் சேர்ந்த தவயோகராஜா ஆகியோர் பந்தெறிதலிலும் துடுப்பெடுத் தாடுவதிலும் திறமையாக விளையாடினர்.

போட்டியிட்ட சில கல்லூரி களின் முடிவுகள்:

### சென்.ஜோன்ஸ் கல்லூரி

யாழ்ப்பாணக் கல்லூரியை இன்னிங்ஸாலும் ஸ்கந்தவரோ தயக் கல்லூரி ஹாட்லிக்கல் லூரி, ஆகியவற்றை ஏழு விக்கட்டுகள் வித்தியாசத்தி லும் சென்.ஜோன்ஸ் வெற் யிட்டியது. அதே நேரத்தில் நாலந்தாவுடன் விளையாடி ஏழு விக்கட்டுகள் வித்தியா சத்தில் தோல்வியுற்றது மேலும் சென்.ஜோன்ஸ்கல்லூரி சென். சில்வேஸ்டர் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி ஆகியவற்றுடன் விளையாடி வெற்றியீட்டியிருக்கிறது, மத் திய கல்லூரியுடன் சரிசம வெற்றிபெற்றது. சென். பட் ரிக்ஸுடன் விளையாடி ஒரு ஓட்டவித்தியாசத்தால் தோல் வியுற்றது.

### ஹாட்லிக் கல்லூரி

ஹாட்லிக் கல்லூரியுடன் விளையாடிய சென். படரிக்ஸ் கல்லூரி (ஒரு இன்னிங்ஸ்), யூனியன் கல்லூரி, ஸ்ந்தவரோ தயா,மத்தியகல்லூரி(4 விக்கட் டுகள் வித்தியாசம்) யாழ்ப் பாணக் கல்லூரி, யாழ்ப்பாண இந்துக்கல்லூரி ஆகியவைகள் தோல்வியுற்றன. ஆனால் சென். சில்வேஸ்டர், சென்.ஜோன்ஸ் ஆகிய கல்லூரிகள் வெற்றியீட் டின.

### மத்திய கல்லூரி

மத்திய கல்லூரியுடன் விளை யாடிய சென். சில்வேஸ்டர் (விக்கட்டுகள் வித்தியாசம்), ஸ்கந்தவரோதய (10 விக்கெட் டுகள் வித்தியாசம்), யாழ்ப் பாணக்கல்லூரி (9 விக்கட்டு கள் வித்தியாசம்), மாலிய தேவா (7 விக்கட்டுகள் வித்தியாசம்) ஆகிய கல்லூரிகள் தோல்வியுற்றன சென். பட்ரிக்ஸ் 34 ஓட்டங்க ளாலும், ஹாட்லிக்கல்லூரி 4 விக்கட்டுகள் வித்தியாசததா லும் மத்திய கல்லூரியைத் தோற்கடித்தன. சென். ஜோ ன்ஸ் கல்லூரியும் மத்திய கல் லூரியும் விளையாடியதில் எந் தக் கல்லூரியும் வெற்றியீட்ட வில்லை.

### யாழ்ப்பாணக் கல்லூரி

சென். பட்ரிக்ஸ் கல்லூரி (இன்னிங்ஸ்), யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி (இன்னிங்ஸ்) ஆகியவைகள் யாழ்ப்பாணக் கல்லூரியுடன் விளையாடியதில் யாழ்ப்பாணக் கல்லூரி வெற்றி யீட்டியது. மத்திய கல்லூரி (9 விக்கட்டுகள் வித்தியாசம்), சென். ஜோன்ஸ் கல்லூரி (இன் னிங்ஸ்) ஆகியவற்றுடன் விளை யாட்டியதில், யாழ்ப்பாணக் கல்லூரி தோல்வியடைந்தது. சென். ஜோன்ஸுடன் விளையா டியதில் ஆட்டம் சரிசமமாகமுடி வடைந்தது.

### ஸ்கந்தவரோதயா

ஸ்கந்தவரோதயக் கல்லூரி யுடன் விளையாடிய யாழ்ப்பா ணம் இந்துக்கல்லூரி, யூனியன் கல்லூரி, மகாஜனக் கல்லூரி ஆகியவைகள் தோல்வியுற்றன. ஆனால் ஸ்கந்தவரோதயக் கல் லூரியுடன் மத்திய கல்லூரி, சென். ஜோன்ஸ், ஹாட்லிக் கல் லூரி ஆகியவைகள் விளையாடி யதில் ஸ்கந்தவரோதயக் கல் லூரி தோல்வியுற்றது.

### சென். பட்ரிக்ஸ்

சென். ஜோன்ஸ் கல்லூரி, மத்திய கல்லூரி, மகாஜனக் கல் லூரி ஆகியவற்றுடன் விளையா டியதில் சென். பட்ரிக்ஸ் வெற்றியீட்டியது. ஆனால் ஹாட் லிக் கல்லூரியுடனும் யாழ்ப்பா ணக் கல்லூரியுடனும் விளையா டியதில் சென். பட்ரிக்ஸுக்கு தோல்வியே ஏற்பட்டது.

### யாழ்ப்பாணம் இந்து

யாழ்ப்பாணம் இந்துக் கல் லூரியுடன் யூனியன் கல்லூரி மகாஜனக் கல்லூரி ஆகியவை கள் விளையாடியதில் இந்துக் கல்லூரி வெற்றியீட்டியது. ஆனால் ஸ்கந்தவரோதயாக் கல் லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி (இன்னிங்ஸ்) சென். ஜோன்ஸ் குருநாக்கலை சென். அனிஸ் ஆகியவற்றுடன் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி விளையாடிய தில் இந்துக் கல்லூரி தோல்வி யடைந்தது.

---

## புதிய நாணயங்கள்

கொழும்பு, புதன்

கொழும்பிலுள்ள மத்திய வங்கி புதிய ஒரு சத, ஐந்து சத நாணயங்கள் விநியோக வேலையை இன்று காலை ஆரம் பித்தது.

# புதுவருட விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பம்

பருத்தித்துறை, வியாழன்

பருத்தித்துறையில் பொலிஸ் பகுதியினரால் ஏற்பாடுசெய் யப்படும் புத்தாண்டு விழாக் கொண்டாட்டத்திற்கான கைப் பந்தாட்டப் போட்டிகள் உடுப் பிட்டி, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை ஆகிய மூன்று இடங்களில் ஆரம்பமாகியுள் ளன. 50 மைல் சைக்கிள் ஓட்டம் புதுவருடத்தன்று நடைபெறவிருக்கிறது. அன்று காலை ஆரம்பமாகும் இப்போட் டியில் சுமார் 50 பேர் கலந்து கொள்வார்களாம்.

மற்போர் போட்டி, தாச்சிப் போட்டி ஆகியவை இம்மா தம் 9-ம் திகதியன்று ஆரம் பமாகவிருக்கிறது. மற்போரில் 12 சோடி மல்லர்களும் தாச் சிப்போட்டியில் பத்துகோஷ் டிகளும் கலந்துகொள்ளவிருப் பதாக தெரியவருகிறது.

கயிறு இழுத்தல் போட்டிக் கும், கதம்பகச்சேரிப் போட் டிகளுக்கும் பலர் விண்ணப் பித்திருப்பதாயும் அவைகளும் பத்தாம் திகதி ஆரம்பமாகும் எனவும் கூறப்படுகிறது.

---

கொழும்பு, வியாழன்

பொதுச் சேவைக் கமிஷ னில் திரு. அஸீஸ் நியமிக்கப் பட்டுள்ளதால், அவரால் செனட் சபையில் ஏற்பட்ட காலி ஸ்தானத்திற்கு முஸ்லிம் ஒருவரை நியமிக்கும்படி முஸ் லிம் சங்கங்கள் பிரதமரைக் கேட்டுள்ளன

# வானொலி நிகழ்ச்சிகள்

### வெள்ளி 5-4-63

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 பாமாலை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 பாலாம்பிகை இராஜேந்தி ரம் — பக்திப்பாடல்கள், 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நாகஸ் வரம், 6-15 கிராமஞ்சிகை, 6-45 வீணை.

இரவு 7-00 ஞானஞ்சலி, 7-30 நேயர்விருப்பம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 விமர் சனங்கள், 9-40 எஸ். விஜசித் தம்பி, 10-15 தேர்ந்தஇசை.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 3-00, இரவு 7-15)

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள்வாக்கு, 7-05 வாத் திய இசை, 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30செய்திக்குறிப் புகள், 7-35 எம். குளிக்கரை தக்ஷிணமூர்த்தி — நாகஸ்வரம்.

பகல் 12-00 தொழிலாளர் களுக்கு, 1-00 மாதர்நிகழ்ச்சி, 1-30 வாத்திய இசை, 1-50 குரல் இசை, 2-10 தொழிலைத் தேர்தெடுக்க — மாணவர் களுக்கு வேலை வாய்ப்புகள்.

மாலை 4-45 விவிதபாரதி (கர் நாடக சங்கீதம்), 5-45 காந்தி அஞ்சலி, 6-20 கிராமநிகழ்ச்சி கள்.

இரவு 7-30 பொங்கியெழும் பாரதம் — சென்னை அஞ்சல், 7-45 எம். எல். வசந்தகுமாரி — பாட்டு, 9-15 பல்கணி, 9-30 மல்லிசை, 9-45 இசைமாலை.



## "உள்ளூராட்சி...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

சன் திட்டவட்டமாகக் கூற வேண்டும். சபை உறுப்பினர்கள், தொழிலாளர்களின் வேலைகளைக் கண்காணிப்பது முறையற்றது.

வரியிறுப்பாளர்கள் தங்கள் உரிமைகளையும் கடமைகளையும் உணர்ந்து நடக்கவேண்டும்.

### வரவு அதிகம் செலவு குறைவு

நடந்த நாலு, ஐந்து வருடங்களின் வரவு செலவுக் கணக்கின்படி வரவில்பார்க்க செலவு கூடியதாகவே இருந்தது. ஆனல் எனது காலத்தில் சமர்பபித்த வரவு செலவுக்கணக்கின்படி செலவு குறைவாகவும் வரவு கூடியதாகவும் இருப்பதைக் கவனிக்கவும்.

யான் எல்லா வட்டாரங்களுக்கும் 2½ லட்சம் ரூபா செலவு செய்வதற்கு ஒதுக்கிவைத்திருக்கிறேன் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கடைசியாக ஒரு முக்கிய வார்த்தை சொல்லவிரும்புகிறேன்.

அதாவது எனது வைத்திய பணியை எவ்வளவோ கஷ்டத்துடன் செய்துவந்த பொழுதிலும் நகரசபை, நரகசபையாகப் போகவிடாமல் தடுப்பதின் நோக்கமாக உடல் நலத்தையும் பொருள் நஷ்டத்தையும் பார்க்காமல் முதல்வர் பதவி வரை ஏற்று திரிகரண சத்தியுடன் பணியாற்றினேன். இன்னும் எவ்வளவோ திருத்தங்கள், நன்மைகளைச் செய்யமுடியும், செய்யத் திட்டங்களும் போட்டிருந்தேன். ஆனல் (நாசசக்திகளின்) அருவருப்பான மூலைகளையும் சூழ்ச்சிகளையும் பொய்ப்பிரசாரங்களையும் சகிக்கமுடியாமல், நகரமக்களுக்கு என்னல் செய்யக கூடிய நன்மைகள் முற்றையும்செய்துமுடிக்காமல் மன வருத்தத்துடன் விலகவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதென்பதை அறியத்தருகிறேன்.

---

## ஐயாறன்

(4-ம்ப சத் தொடர்ச்சி)

கூடியிருந்த பக்தகோடிகளை எல்லாம் பரவசப்படுத்திவிட்டது.

எவ்வளவோ சிக்கல்கள் ஏற்பட்டும். குறித்த நேரத்தில் எவ்வித தடையுமின்றி கும்பாபிஷேக வைபவங்கள் மிகச் சிறப்பாக நடந்தன. சரித்திரத்தில் பதியத்தக்க இந்தக் கண்கொள்ளாக் காட்சிகளை எல்லாம கலர் சினிமாப்படமாகப் பிடித்திருக்க வேண்டும். நேரில் பார்த்தவர்கள் பாக்கியசாலிகள்.

* * *

கும்பாபிஷேகம் முடிந்தவுடன் தமது பொறுப்பு முடிந்துவிட்டதாயும் நாடெங்கும் முள்ள இந்து சமூகத்தவர் சேர்ந்து இக்கோயிலின் நிர்வாகப் பொறுப்பை இனி ஏற்க வேண்டுமென்றும் மிக அடக்கத்துடன் தெரிவித்தார் திரு. ராஜவரோதயம்.

திருக்கோணமலையை தமிழர் இழந்துவிடுவரோ என்றிருந்த நிலையை, இக்கோயில் கும்பாபிஷேக வைபவம்மாற்றி விட்டதென்றூர் அங்கு வசிக்கும் ஓர் அன்பர், புதிய உற்சாகத்துடன்.

கும்பாபிஷேகத்துக்கு முதல் நாள் ஒரு பௌத்தபிக்கு, அங்கு சென்று எல்லாவற்றையும் பார்த்துவிட்டு, 'அபே இவ ராய்' "நாங்கள் முடிந்தோம்" என்று சிங்களத்தில் சொல்லிவிட்டுச் சென்றூராம். பாவம்!

* * *

நாயுமாய் எனக்கே
நல கண்ணுமாய்
பேயனேனையும் ஆண்ட
பெருந் தகை
தேயநாதன் சிராப்பள்ளி
மேவிய
நாயனுரென நம்வினை
நாசமே.

—திருநாவுக்கரசர்

---

# 6 மாதங்களுக்குள் மூன்ருவது இடமாற்ற உத்தரவு

## தொழிற்சங்கம் ஆட்சேபம்

யாழ்ப்பாணம், வெள்ளி

தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடும் தொழிற்சங்க உத்தியோகத்தர்களை சுகாதார இலாகா அதிகாரிகள் தண்டிக்கமுயற்சிசெய்கிறது என்று அரசாங்க தொழிலாளர் தொழிற்சங்க சம்மேளனம் சுகாதார டைரக்டருக்கு ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியைச் சேர்ந்த பணியாளர் திரு. எஸ். ஆர். அருமைநாயகம் ஆறுமாதங்களுக்கிடையில் மூன்ருவது முறையாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதைத் தொடர்ந்தே இவ்விதம் ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டுள்ளது. முதல் தடவை திரு அருமைநாயகம் வல்வெட்டித்துறைக்கும். இரண்டாவது தடவை மன்னருக்கும் மாற்றம் செய்யப்பட்டார். முதல் இடமாற்றத்தை யாழ்ப்பாணம் சுகாதார சேவை சுப்ரிடைன்டனாலும் இரண்டாவது இடமாற்றம் சுகாதார டைரக்டராலும் செய்யப்பட்டது. ஆனல் இரண்டாவது இடமாற்றம் திறைசேரியின் உதவிக்காரியதரிசியால் பெப்ரவரிமாதம் 6-ந்திகதி ரத்துச்செய்யப்பட்டது. திரு. அருமைநாயகம் அடுத்தமாதம் முதலாம்திகதி தொடக்கம் வவுனியாவிற்கு இடமமற்றம் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

திரு. அருமைநாயகம் யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல தொழிற்சங்க வாதிகளில் ஒருவர் எனவும், அவர் தொழிற்சங்க வேலைகளில் ஈடுபடுவதற்காக அவரை இடமாற்றம் செய்து வருத்தப்படுத்த முயற்சிப்பதாகவும் அரசாங்க தொழிற் சங்கசம்மேளனத்தின் யாழ்ப்பாணம் கிளை தாய்ச் சங்கத்திற்குத் தெரிவித்துள்ளன.

திறைசேரியின் 1957 ஆண்டு 359 இல. வழங்கியசுற்றுநிருபத்தின் பிரகாரம் திரு. அருமைநாயகம் தொழிற்சங்க வேலைகளில் ஈடுபட சட்டப்படி அனுமதிக்கப் பட்டுள்ளார். அவரை சுயநலவாதிகளான அதிகாரிகள் சிலர் இடமாற்றங்கள் மூலம் கஷ்டப்படுத்தி வருகிருர்கள் என்று சங்கம் தெரிவித்துள்ளது.

---

## தமிழர் முன்னணி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தும்வகையில் முன்னணியொன்று அமைக்கப்படலாமென்றும் வட்டமேசை மகாநாட்டில் தமிழ்ப்பிரமுகர்கள் யோசனை எதுவும் தெரிவிக்காவிட்டால் தமிழரசுக்கட்சி தனது திட்டங்களை நடைமுறைக்குக் கொண்டுவருவதற்குத் தயங்கமாட்டாதென்றும் தெரிகிறது.

தமிரசுக்கட்சியின் நடவடிக்ழைககளையும் நேரடி நடவடிக்கை யோசனைகளையும் குறைகூறுபவர்களையும் இதர கட்சித் தலைவர்களையும் பிரமுகர்களையும் வட்டமேசைமகாநாட்டுக்கு அழைக்கலாமெனக் கருதப்படுகிறது.

நாளை கூடும் கட்சியின் பொதுக்காரியசபையும் நாளை மறுநாள் ஞாயிற்றுக்கிழமை கூடும் மத்தியசெயற்குழுவும் இந்த 'தமிழ்ப்பிரமுகர்கள் வட்டமேசைமகாநாடு' யோசனையை ஏற்றுக்கொண்டால் விரைவில் இந்த மகாநாட்டை தமிழரசுக்கட்சி கூட்டுமென்று தெரிகிறது.

மத்திய செயற்குழுவும் பொதுக்காரியசபையும் நேரடி நடவடிக்கை பற்றி ஆலோசனை செய்யவிருக்கின்றன. பொதுவாக நேரடி நடவடிக்கையை ஜூன்மாதத்துக்கு ஒத்திவைக்க வேண்டுமென்ற யோசனை இக் கூட்டங்களில் பரிசீலனை செய்யப்படுமென அறியப்படுகிறது.

---

## மாதம் ஒன்றுக்கு ஒரு ருத்தல் உப்பு

கொழும்பு, வியாழன்

நாட்டிலுள்ள மக்களில் ஒவ்வொருவரும் மாதம் ஒன்றுக்கு 1 ருத்தல் வீதமான உப்பை உபயோகிக்கிருர்கள் என உப்புக் கமிஷனர் வெளியிட்டுள்ள 1960 - 61-ம் ஆண்டிற்கான அறிக்கையில் இருந்து தெரிய வருகிறது. ஒரு வருடத்திற்கு 67,000 தொன் உப்பு வீட்டுப்பாவிப்பிற்குப் பிரயோசனபபடுத்துவதாக அறிக்கை தெரிவிக்கின்றது. கருவாடு தயாரிப்பதற்கு 4,000 தொன் உப்பும், கைத்தொழில் உற்பத்திகளுக்கு 3,000 தொன் உப்புமாக, வருடமொன்றுக்கு மொத்தம் 66,000 தொன் உப்பு உபயோகிக்கப்படுகிறது.

15 வருடங்களுக்குப் பின்னரே இரு மாதங்கள் உப்புத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் கமிஷனர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

## நேருவின் அனுதாபச் செய்தி

புதுடில்லி, ஏப்ரல் 4

லாவோஸ் வெளிவ்வகார மந்திரி மரணமானது குறித்து பாரதப் பிரதமர் திரு. நேரு அனுதாபச் செய்தியொன்று அனுப்பியுள்ளார்.


2வது வாரமாக
காண்பிக்கப்படுகிறது !
முருகன் (ஜிந்துப்பிட்டி)
நவா (கும்பெனித்தெரு)
ஜஸீமா (கிராண்ட்பாஸ்)
2, 6, 9-30 மணி
ஓடியன் (கல்கிசை)
2-15, 6, 9-30 மணி
ஓடியன் (கண்டி)
2-15, 6-15, 9-15 மணி
ராஜா (யாழ்ப்பாணம்)
2-30, 6-30, 9-45 மணி
ஜெமினி கணேஷன்
பி. சரோஜாதேவி
சந்திரபாபு, தேவிகா, எம். வி. ராஜம்மா, கே. டி. சந்தானம், பி. டி சம்பந்தம்
மற்றும் பலர் நடித்த

ஆடிப் பெருக்கு
டைரக்ஷன்: கே. சங்கர்


---

## பஸ்ஸை நிறுத்திய 6 பேர் கைது

பிலியந்தலை, வியாழன்

போக்குவரத்துசேவையிலீடுபட்டுக்கொண்டிருந்த இ.போ.ச. பஸ் ஒன்றை அவ்வாறு சேவைசெய்யவிடாது தடுத்ததற்காக பிலியந்தலைப் பொலிசார் 6 நபர்களைக் கைது செய்தனர்.

நிவந்திடியா - ஹொகன்டரா சந்தியில் தேங்காய் மட்டைகள், கற்கள், மரத்துண்டுகள் ஆகியவற்றைக் குவித்து பஸ்போக்குவரத்தை இவர்கள் தடுத்ததாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இவ்வித தடையால் 6 பாதைகளில் பஸ்போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

---

## ஆனந்தனுக்கு பாராட்டு விழா

யாழ்ப்பாணம், வியாழன்

நீச்சல் வீரர் ஆனந்தனுக்கு குரும்பசிட்டி உதயதாரகை சனசமூகநிலைய சார்பில் எதிர் வரும் சனிக்கிழமை பிற்பகல் 6-30 மணிக்கு ஒரு பகிரங்க பாராட்டுவிழா நடத்தப்பெறும். இவ் வைபவத்தில் பிரதம விருந்தினராக காங்கேசன்துறை உதவி பொலிஸ் சுப்பிரின்டன்ட் திரு. டி. பி. குணவர்த்தன கலந்துகொள்வார்.

---

## நிர்வாகிகள் தெரிவு

மூளாய், வியாழன்

மூளாய் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கக் கூட்டம், மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை மண்டபத்தில் திரு. வே. இளையதம்பி தலைமையில் நடைபெற்றது. பின்வருவோர் உத்தியோகஸ்தராகத் தெரியப்பட்டனர்.

தலைவர்: வழக்கறிஞர் வே இளையதம்பி, உப-தலைவர்: திரு. இ. தம்பையா, காரியதரிசி: திரு. சி. காத்திகேயர், உப-காரியதரிசி: திரு. வ. கந்தசாமி, உப-சபைகளும் தெரிவு செய்யப்பட்டன.

---

## வெசாக் தினத்தில் பஸ்சேவை இல்லை

கொழும்பு, வியாழன்

வெசாக் தினத்தன்று பௌத்த சமயத்தைச் சர்ந்த இ.போ.ச. ஊழியர்கள் பலர் 'சில்' அனுஷ்டிக்க விருப்பதால் பல பகுதிகளில் பஸ் சேவை இருக்கமாட்டாது எனத் தெரிகிறது.

20 ஆயிரத்துக்கு மேற்பட்ட ஊழியர்கள் சில் அனுஷ்டிக்க இருப்பதாகவும் இவர்கள் டிப்போக்களில் 'சில்' அனுஷ்டிப்பார்களெனவும் அறியப்படுகிறது.


புத்தாண்டின் புனித விருந்து!
மக்கள் கண்குளிர இதயம் மகிழவருகிறது
கிங்ஸ்லி பிளாஸா வெலிங்டன் விஜயா
(கொழும்பு)(வெள்ளவத்தை)(யாழ்ப்பாணம்) (மட்டக்களப்பு)
ஸ்ரீ கிருஷ்ணு விஜிதா ஜெமினி
(திருமலை) (ஹட்டன்) (ராகலை)
மற்றும் சில சினிமாஸ் திரைகளில்
சபாஸ் சந்திரபாபு என......
நாடும் ஏடும் வாழ்த்துகிறது
நடிப்புலகம் போற்றுகிறது
கானத்தயாராகுங்கள்

★ சந்திரபாபு,
★ எம். என். ராஜம்
★ டி. எஸ். பாலையா
★ கே. சூரியகலா
★ ரி எஸ். துரைராஜ்
★ பி. எஸ். ஞானம்
★ ஜாவர்சீதாராமன்
சி. டி. ராஜகாந்தம்
★ கள்ளபார்ட் நடராஜ்
மற்றும் பலர் நடித்த
சிவகாமி பிக்சர்ஸ்
குமார ராஜா
திரைக்கதை-வசனம்: முரசொலிமாறன் எம். ஏ.
இசை: டி. ஆர் பாப்பா
டைரக்ஷன்: ஜி. கே. ராமு
நடனம்: சாயி, சுப்புலட்சுமி, ஹெலன்
பின்னணி: வி. என். சுந்தரம், பி. லீலா, ஜமுனுராணி, ரத்தினமாலா, சூலமங்கலம் ராஜலட்சுமி, ரேணுகா, கஜலட்சுமி



4-வது வெற்றி வாரம் !
கிங்ஸ்லி பிளாஸா வெலிங்டன் விஜயா
(கொழும்பு)(வெள்ளவத்தை)(யாழ்ப்பாணம்) (மட்டக்களப்பு
மற்றும் 5 திரைகளில்
சிவாஜி கணேசன் சாவித்திரி
மற்றும் பலர் நடிக்கும்
பத்மினி பிக்சர்ஸ்
கப்பலோட்டிய தமிழன் !



மனோகரா
(யாழ்ப்பாணம்)
ரிட் ஹட்லி—ஷீலா டர்ஸி
நடித்த
சோரோஸ் (f)பயிட்டிங் லீஜன்
ஆங்கில சண்டைப் படம்.


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில்மேலை வீதி 53-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1963-ம்ஆண்டு ஏப்ரல் மாதம் 5-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.